செந்தமிழ்

31
தொகுதி - ௩௧

11
எண் - ௧௧

செப்டம்பர் - 1934

JL
031~211,N03
N34: 31-11
166175

(1)

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

ஒரு தமிழ்ப் பத்திரிகை.

442

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௩௧] பவ வருஷம் புரட்டாசிமீ [பகுதி-௧௧.
Vol. XXXI. September-October 1934. No. 11.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
24 SEP 1934
MADRAS

உள்ளுறை.

ருக்கசங்கிரக சோதனம்:— } திரு. நாராயணையங்கார் (பத்திராசிரியர்) ௨௪௧–௨௪௮
...தம்:— ஸ்ரீமத். V. S. இராமஸ்வாமிசாஸ்திரிகள் B A, B L. ௨௪௯–௨௫௫
மதுரைத்தமிழ்ச்சங்க வருடக்கொண்டாட்டம்:— } T K. இராமாநுஜையங்கார் (உதவிப்பத்திராசிரியர்) ௨௫௬–௨௬௦
மதுரைத்தமிழ்ச்சங்க நிர்வாஹஸபைத் தீர்மானங்கள்:— ௨௬௧
மதுரைத்தமிழ்ச்சங்க மஹாஸபைத் தீர்மானங்கள்:— ௨௬௨–௨௬௪
கலைசைக்கோவை:— (குறிப்புரையுடன்) } ஸ்ரீமத். மஹாமஹோபாத்யாய – தாக்ஷிணாத்ய கலாநிதி Dr. உ. வே. சாமிநாதையர். 33–48
பெருந்தொகை (விசேடக்குறிப்பு):- } ,, மு. இராகவையங்கார். ௯௪௯–௯௫௪
மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் வரவு செலவு கணக்கு :—

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8
வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0
1934.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avergal. and published by Thiru. Narayana Iyengar at the Tamil Sangam Power Press, No. 54, New Jail Road, Madura.

உ

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும் மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும் பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவைசம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩௧] பவ௵ புரட்டாசி௴ [பகுதி-௧௧.

Vol. XXXI. September-October 1934. No. 11.

தருக்கசங்கிரகசோதனம்.

"சத்தம்மெய்ஞ் ஞானம் தருக்கம் சமயமே
வித்தகர் கண்டவீ டுள்ளிட்டாங்—கத்தகத்
தந்தவிவ் வைந்து மறிவான் தலையாய
சிந்திப்பிற் சிட்டன் சிறந்து"

என்று ஒரு தலையாயசிந்திப்பிற் சிட்டனுவான் அறியத்தக்க சிறந்த சாத்திர வரிசையில் நடுநாயகமாகவைத் தெண்ணப்பெற்றிருப்பது தருக்கநூலே.

அந்நூல் வடமொழியிற் சிறிதாயும், பெரிதாயும், எளிதாயும், அரிதாயும் பலதிறப்படச்செய்யப்பட்டுப் பயிலப்பெற்று வருகிறது. அம்முறையில் பாலர்கள் பயிலுதற்கு ஏற்றவாறு செய்யப்பெற்றது தருக்கசங்கிரகம்.

அதனை நந் தமிழ்மாணவர்களும் கற்று நுண்ணறிவுடையாதற் பொருட்டு இருமொழிப்புலமையு மொருங்குடையரான சிவஞான முனிவர் செவ்விய தமிழ்நடையால் மொழிபெயர்த் தளித்தனர்; அதனைத் திருத்திய செந்தமிழ்ச்செல்வரான ஆறுமுகநாவலர் பரிசோதித் தச்சிட்டு வெளியிட்டனர். அதன்படியே பன்முறையச்சிடப் பெற்றுவருகிறது.

166125

031 .. 24 .. 23 ... 74 - 11

[illegible] மதுரைத்தமிழ்ச்சங்கத்துத் தனித்தமிழ்ப்பரீக்ஷைகளுக்குப் பாடமாகவைக்கப்பெற்றிருக்கிறது. அதில் ஏடெழுதி வைத்தோராலும் பிறவாற்றாலும் இடையிடையே நேர்ந்த சிற்சில தவறுகள் காணப்படுகின்றன. அவற்றால் படிப்பவர்கள் இடர்ப்படுகின்றனரென்றும், அவற்றிற்கு ஒரு திருத்தவுரை வரைந்து செந்தமிழில் வெளியிட்டால் பலர்க்கும் உபகாரமாயிருக்குமென்றும் சில பண்டிதர்கள் எனக்குத் தெரிவித்தார்கள். அவர்கள் விருப்பத்துக்கிசைந்தே இத்திருத்தத்தை வெளியிடுகிறேன்.

இதனால் மொழிபெயர்ப்பாளரிடத்திலேனும் பதிப்பாளர்களிடத்திலேனும் யாரும் ஒரு சிறிதும் குறைகருதலாகாதென்பதையும், அவர்கள் செய்துள்ள பேருதவிக்கு நாமெல்லோரும் நன்றியறிதலுடையராகவேயிருக்கவேண்டுமென்பதையும் நாம் மறக்கலாகாது.

திருத்தங்கள் வருமாறு:—

(1) முதற்பத்தியில் (பதார்த்தவிளக்கத்தில்) "சமவாயம் - ஒற்றுமை, சம்பந்தம்" என்று பதிக்கப்பட்டிருக்கிறது. அது, 'சமவாயம் - ஒற்றுமைச்சம்பந்தம்' என்றிருக்கவேண்டும்.

(2) நாற்பத்திரண்டாம் பத்தியில் 'காரியத்துடனாகத்தான் காரணத்துடனாகத்தான்' என்றிருப்பது 'காரியத்துடனேனும் காரணத்துடனேனும்' என்றிருப்பது நன்று.

(3) நாற்பத்துநான்காம் பத்தியில் "கண்ணோடு சையுத்தமான குடத்தில் உருவம் சமவாயமாதலான்" என்றிருக்கிறது. குடத்தில் உருவம் சமவாயமன்று; சமவேதம். உருவத்துக்கும் குடத்துக்குமுள்ளசம்பந்தம் சமவாயசம்பந்தம். அது குடத்தின் கண்ணும் குடவுருவத்தின் கண்ணும் ஒருங்குள்ளது. ஆதலால் "கண்ணோடு சையுத்தமான குடத்தில் உருவத்துக்கு சமவாயமுண்மையால்" எனத்திருத்திக்கொள்ளவேண்டும்.

(4) இன்னும் அப்பத்தியுள்ளே. 'உருவத்தில் உருவத்தன்மை சமவாய மாதலால்' என்றிருப்பதையும் (முன் காட்டியமுறைப்படி)

'உருவத்தில் உருவத்தன்மைக்கு, சமவாயமுண்மையால்' என்று திருத்திக்கொள்ளவேண்டும்.

(5) இன்னும் அப்பத்தியுள்ளே, "சத்தத்தில், சத்தத்தன்மை சமவாயமாயிருத்தலால்" என்று எழுவாய்த் தொடராயிருப்பதையும், "சத்தத்தில், சத்தத்தன்மைக்கு சமவாயமுண்மையால்" என வேற்றுமைத்தொடராகத் திருத்திக்கொள்ளவேண்டும்.

(6) இன்னும் அப்பத்தியுள்ளே, "தப்இபூலம்" என்று எழுத்து மாறிக்கிடப்பதை "இப்பூதலம்" எனத்திருத்திக்கொள்ளவேண்டும்.

(7) தொண்ணூற்றிரண்டாம் பத்தியுள், 'நிமிர்தல் - நிமிர்ந்து கூடுதற்கேது' என்றிருப்பது, 'நிமிர்தல் - வளைந்தவுடல்செவ்விதாதற்கேது' என்றிருக்கவேண்டும்.

(8) தொண்ணூற்றேழாம் பத்தியுள், 'காரியத்தோற்றத்தின் பின்னுள்ளது' என்றிருப்பது 'காரியக்கேட்டின் பின்னுள்ளது' என்றிருக்கவேண்டும். அல்லாக்கால் காரியமும் காரியத்தோற்றத்தின் பின்னிருக்குமாதலால் அதில் அதிவியாத்தியாகும்.

(9) மூலத்தின் இரண்டாம்பத்தி உரையில், "வேறுபடுத்தலினும்" என்றிருப்பது 'வேறுபடுதலினும்' என்றிருக்கவேண்டும். ஈண்டு முதனூலிலுள்ள வடமொழிப்பொருளும் இஃதே.

இதன் விளக்கம் வருமாறு:—

பதார்த்தங்களை அறிவுறுக்குமிடத்துத் தனித்தனி இலக்கணங் கூறவேண்டுதலால், அவ்விலக்கணங்களும் இன்னபடியிருக்கும் என அறிவுறுத்தவேண்டி, 'இலக்கியத்தன்மையை வரைந்துகொள்வதனோடு நியதமா யொப்பநிற்பது' என்று அவற்றிற்கு இலக்கணம் சொல்லப்பட்டது. இவ்வாக்கியப்பொருள் அரிதினுணர்தற்பாலதென்பதுபற்றி இதனையொழித்து, "பிறவற்றினின்றும் வேறுபடுப்பதே" இலக்கணமெனக் கொள்ளின் இழுக்கென்னையென்ற சங்கையுண்டாயிற்று.

அதாவது:—பிருதிவி முதலிய பொருள்களுக்கு நாற்றமுடைமை முதலியன இலக்கணமாகக் கொள்ளப்பட்டன. அவ்விலக்கணங்கள் ஒவ்வொன்றும் தத்தம் இலக்கியப் பொருள்களைப் பிறவற்றினின்றும் வேறுபடுப்பனவாயுள்ளன. இதனை, பிருதிவியிலுள்ள நாற்றமுடைமை அப்பிருதிவியை, மற்றைப் பொருள்களினின்றும் வேறுபடுப்பதாலும், இவ்வாறே மற்றுள்ள இலக்கணங்களும் அதனதன் இலக்கியத்தைப் பிறவற்றினின்றும் வேறுபடுத்தலாலும் அறியலாம். ஆவிற்கு அலைதாடியுடைமையும் அவ்வாவினை எருமை முதலியவற்றினின்றும் வேறுபடுத்தலால் அதற்கு இலக்கணமாயிற்று. ஆகவே, எடுத்துக்கொண்ட இலக்கியத்தைப் பிறவற்றினின்றும் வேறுபடுப்பதியாது அதுவே அவ்விலக்கியத்திற்கு இலக்கணம் எனக்கொள்ளிற் படுமிழுக்கென்னை? என்பது தடையுரையின்கருத்து.

இதற்குவிடை:—இலக்கியத்தைப் பிறவற்றினின்றும் வேறுபடுப்பதே இலக்கணமெனக்கொள்ளில், முன்காட்டிய இலக்கணங்கள் அவ்வப்பொருள்களைப் பிறவற்றினின்றும் வேறுபடுப்பதுபோல, ஒவ்வொருபொருளினுமுள்ள பிறவற்றின் வேறுபாடும், அவ்வப்பொருளைப் பிறவற்றினின்றும் வேறுபடுப்பதாயிருத்தலால், அவ்வேறுபாட்டில் அதிவியாத்தியாம் என்பது கருத்து. அன்றியும் பதார்த்த சாமானியத்துக்கு அபிதேயத்தன்மை இலக்கணமாதலால் அதில் அவ்யாப்தியுமாம். எங்ஙனமெனில், எல்லாப்பொருளும் பதார்த்தமாதலால் அவற்றிற்குப் பிறிதாயுள்ளபொருளொன்று மில்லாமையால் அவற்றைப் பிறவற்றினின்றும் வேறுபடுப்பதாகாது அபிதேயத்தன்மை; அதனானே அவ்வியாத்தியாம் என்க.

(10) இன்னும் அப்பத்தியுரையுள்ளே, 'அதிவியாத்தி நீக்குதற்கு' என்றிருப்பது 'அதிவியாத்தியும், அவ்வியாத்தியும் நீக்குதற்கு' என்றிருக்கவேண்டும். அதாவது பிறவற்றினின்று வேறுபடுதலின் அதிவியாத்தியும், அபிதேயத்தன்மை முதலிய பதார்த்தலக்ஷணங்களில் அவ்வியாத்தியுமாம் என்றபடி. (இத்தவறு முதனூலாகிய வடமொழித் தீபிகையிலுமுள்ளது. அப்பதிப்பில் "வ்யாவ்ருத்தாவபிதேயத்வாதௌ வாதிவ்யாப்தி:" என்றிருப்பது "வ்யாவ்ருத்தாவபிதேயத்வாதௌ வாதிவ்யாப்த்யவ்யாப்தீ" என்றிருக்கவேண்டும்.)

(11) இன்னும் அப்பத்தியுரையுள், 'அதின் வேறாய' என்றிருப்பது 'அவற்றின் வேறாய' என்றிருப்பின் நன்று.

(12) இன்னும் அப்பத்தியுரையுள், 'வேறு படுத்தலும்' என்றிருப்பது 'வேறு படுதலும்' என்றிருக்கவேண்டும்.

(13) இன்னும் அப்பத்தியுரையுள் 'குணத்தோடொருங்கு நிற்பதாய்' என்றிருப்பது 'குணத்தோடொருங்கு நிற்பதாய' என்றிருக்கவேண்டும். இது, ஒருங்கு நிற்பதாய அபரமானசாதி எனப் பெயரெச்சவடுக்காய்ச் சாதிக் கடையாயுள்ளது.

(14) ஒன்பதாம் பத்தியின் உரையில், 'அவயவநாற்றம் புலப்படுதலின்' என்றிருப்பது 'அவயவநாற்றம் புலப்படுதலின் எனின்' என்றிருக்கவேண்டும். இங்கு எனின் என்றது, 'ஆண்டு நாற்றத்தோற்றம் பொருந்தாதென்னற்க அவயவநாற்றம் புலப்படுதலின்' என்பதை எதிருரையின் கொண்டுகூற்றென்பது குறித்துநின்றது. (கொண்டுகூற்றுக் குறிப்பென்றபடி).

இதன்விளக்கம்வருமாறு:—

இவ்வொன்பதாம் பத்தியுரையுள் 'நாற்றமுடைமை பிருதிவியிலக்கணமாயின்' என்றுதொடங்கி...............அழிவுபடுங்குடத்தினும், அவ்யாத்திவருமாலெனின்' என்னுமளவும், ஆசிரியனைநோக்கி மாணாக்கன் வினவுந் தடையுரையும் அவ்வுரைக்கு ஆசிரியன் உரைக்கும் எதிருரையின் கொண்டுகூற்றும் விரவிய மாணாக்கன் கூற்றினைக் கொண்டுகூறிய ஆசிரியன்கூற்று. இதனுள் "நறுநாற்றப் பொருளும் தீநாற்றப்பொருளுமாகிய அவயவங்களால் ஆக்கப்படும் திரவியத்தின் ஒன்றுக்கொன்று மாறுபாட்டால் நாற்றமுண்டாகாமையின் அவ்வியாத்திக்குற்றந் தங்கும்:" என்பது மாணாக்கன் கூறிய தடையுரைப்பிரதிக்கினை. இதன்மேல், "ஆண்டு நாற்றத்தோற்றம் பொருந்தாதென்னற்க" என்றது ஆசிரியன் மாணாக்கனை நோக்கி மறுத்துரைப்பதாக மாணாக்கன் கொண்டுகூறிக் கொண்டபடி. 'அவயவநாற்றம் புலப்படுதலின்' என்றது அக்கொண்டுகூறியகூற்றிற்கு ஆசிரியன் காட்டும் ஏதுவினையும் கொண்டுகூறியவாறு. இக்கொண்டுகூற்றின்மேல் இது கொண்டுகூற்று என்று அறிவுறுத்தற்குரிய 'எனின்' என்னும் ஒரு சொல்லிருக்கவேண்டும். (அதில்லாமையால் பொருள்விளங்காது மலைவுண்டாகின்றது.)

(15) அதன்பின் 'அவ்விரண்டன்கூட்டத்தாளுகிய கலப்புநாற்றமொன்றெனக்கோடல் பொருந்தாமையின்' என்றிருப்பது 'அவ்விரண்டன் கூட்டத்தாளுகிய கலப்புநாற்ற மொன் றுண்டெனக்கோடல் பொருந்தாமையின்' என்றிருக்கவேண்டும். இது மாணவன்கூற்றாய் அவ்வியாதிக்குற்றந்தங்கும் என்பதைக்கொண்டுமுடிவதாயிற்று. 'இன்னும்' என்றது மாணாக்கன் மற்றுமோர் அவ்வியாதிக்குற்றம் காட்டத் தொடங்கியபடி காட்டியவாறு.

(16) அதன்பின்பு, 'நாற்றத்தோடொருங்கிருக்கும்பொருண்மைக் கபரமான' என்றிருப்பது 'நாற்றத்தோடொருங்கிருக்கும் பொருண்மைச்சாதிக் கபரமான' என்றிருக்கவேணடும்.

(17) இவ்வாறே பத்தாம்பத்தியுரையினுமிருக்கவேண்டும்.

(18) பதினொன்றும் பத்தியுரையுள், "ஒளிரும் வெம்மையும்" என்றிருப்பது 'ஒளிரும் வெண்மையும்' என்றிருக்கவேண்டும். ("அதன் வெம்மைப் பரிசமும்" என்று வெம்மை சொல்லப்பட்டமையால், எஞ்சிய ஒளிரும் வெண்மை புலப்படாமையே உடன் கூறத்தகுவது).

(19) முப்பத்தேழாம் பத்தியுரையுள். 'குடத்தின்கட் குடசம்பந்த முண்மையான்' என்றிருப்பது. 'குடத்தன்மையின்கட் குடசம்பந்த முண்மையான்' என்றிருக்கவேண்டும். இங்கு விசேடணவிசேடியங்களுக்குள்ள சம்பந்தம் சொல்லப்படுகிறது. விசேடணம் குடம்; விசேடியம் குடத்தன்மை. இவற்றிற்குள்ள சம்பந்தம் சமவாயசம்பந்தம். அது குடத்தைப்பற்றியும் குடத்தன்மையைப்பற்றியும் நிற்குமாதலால் குடத்தன்மையின்கட் குடசம்பந்தமுள்ளதாயிற்று. இங்குக் குடசம்பந்தம் என்றது குடத்துக்கும் குடத்தன்மைக்குமுள்ள சமவாயசம்பந்தத்தை.

(20) அறுபத்தாறும் பத்தியுரையுள். உபாதிவகையினிரண்டாவதற்கு உதாரணங்காட்டுமிடத்து. 'வாயு காட்சிப்பொருள், அளவையானளக்கற்பாலதாகலின்' என்று காட்டப்பட்டிருக்கிறது. இது முதனூலிலுள்ளபடி மொழிபெயர்க்கப்பட்டதாயினும், அவ்விரண்டாவது உபாதிக்கேபுரிய சிறந்த உதாரணமாகாது, சபக்கவிபக்கங்களிரண்டிலுமுள்ளதாய்ப் பொதுவநைகாந்திகமாயிருத்தலால் பொருத்தமின்றென்று தோன்றுகிறது. ஆதலால் 'அளவையானளக்கற்பாலதாகலின்' என்பதையொழித்து 'காட்சிப்பரிசத்துக்குப்பற்றுக்கோடாகலான்' என்றிருப்பிற்பொருந்தும்.

மேற்காட்டிய உபாதியுதாரணவிளக்கம் வருமாறு:—வாயு காட்சிப்பொருள், காட்சிப்பரிசத்துக்குப்பற்றுக்கோடாகலின், யாதுயாது காட்சிப்பரிசத்துக்குப் பற்றுக்கோடாயுள்ளதோ அது அது காட்சிப்பொருளாயுள்ளது, பிருதிவி முதலியன போல; என அனுமான வாக்யம் செல்லா நிற்க, இங்கு உற்பூதவுருவம் உபாதியாயிற்று. எங்ஙனமெனில் அவ்வுற்பூதவுருவம் பக்கதருமந்தான் வரைந்துகொள்ளப்படும் துணிபொருளில் வியாபித்து ஏதுவில் வியாபியாதிருத்தலான் என்க.

இங்கு பக்கப்பொருள் வாயு. அதன்கணுள்ள தருமம் புறப்பொருளாதல். அதனுல் வரைந்து கொள்ளப்படும் துணிபொருளாகிய காட்சிப்பொருள்கள் பிருதிவி, அப்பு, தேயுக்கள். அவற்றில் வியாபித்திருப்பது உற்பூதவுருவம். அது, இங்கு ஏதுவாயுள்ள காட்சிப்பரிசத்துக்குப் பற்றுக்கோடாந்தன்மையோடுகூடிய வாயுவில் இல்லாமையால் ஏதுவில் வியாபியாததாயிற்று. ஆகவே, ஏதுவின் வியாபகமான சாத்தியத்தில் வியாபித்திருப்பதொன்று, சாத்தியத்தின் வியாப்பியமான ஏதுவிலும் வியாபித்திருக்கவேண்டியது நியமமாயிருக்கவும் அவ்வாறு வியாபியாதிருப்பதால் அந்நியமம் தவறுதல் பற்றி அவ்வுபாதியுடைய ஏது பிறழ்ச்சியுடையதாய் வியாத்தியுணர்வுக்குத்தடையாயிருத்தலால் ஏதுப்போலியாயிற்று.

(21) இன்னும் அவ்வுரையுள் நான்காவது உபாதிக்கு 'முன்னபாவம் நாசமுடைத்து அளவையானளக்கற்பாலதாகலின்' என்று உதாரணம் காட்டியிருப்பதும் முன் காட்டியபடியே பொதுவநைகாந்திகமாதலால், எடுத்துக்கொண்ட ஏதுப்போலிக்குச் சிறந்த உதாரணமாகமாட்டாது. இங்கு 'முன்னபாவம் நாசமுடைத்தன்று உண்டாகற்பாலதன்றாகலின்' என்றிருக்கவேண்டும். இதன்கண் யாதானுமொரு தருமத்தால் வரைந்துகொள்ளப்பட்ட துணிபொருளில் வியாபித்து ஏதுவில் வியாபியாத பாவத்தன்மையுபாதியாயிற்று. எங்ஙனமெனில் இங்கு,

யாதானுமொரு தன்மையாவது *நித்தியத்தன்மை; அதனால் வரைந்துகொள்ளப்பட்ட அணிபொருள் †நாசமின்மை. அதில், யாது யாது நித்தியத்தன்மையால் வரைந்துகொள்ளப்பட்ட நாசமின்மையுடையதோ அது அது பாவத்தன்மையுடையது; பரமாணுமுதலியன போல, எனத் துணிபொருளாகிய நாசமின்மையில்வியாபித்து, ஏதுவாகிய உண்டாகற்பாலதாந்தன்மையுடைய அழிவுபாட்டபாவத்தில் பாவத்தன்மை வியாபியாமையால் அது உபாதியாயிற்று.

(22) எழுபத்துமூன்றாம் பத்தியுரையுள் 'அதுபிரமாணமாதலின்மையைக்கவராது' என்றிருப்பது 'அதன்பிரமாணமாதலின்மையைக்கவராது' என்றிருக்கவேண்டும்.

(23) இன்னும் அப்பத்தியுரையுள் 'அதனை நீக்குதற்கு அது என்றும் கூறியவாறு' என்றிருப்பது 'அதனை நீக்குதற்கு அதன் என்றும் கூறியவாறு' என்றிருக்கவேண்டும்.

(24) இன்னும் அப்பத்தியுரையுள் 'பிரமாணமாதற்குச் சார்பாயுள்ளது பிரமாணமாதலின்மையைக்கவராது என்றிருப்பது 'பிரமாணமாதற்குச் சார்பாயுள்ளதன் பிரமாணமாதலின்மையைக்கவராது' என்றிருக்கவேண்டும்.

தருக்கசங்கிரகமும் தீபிகையும் படிப்பவர் பலர்க்கும் பயன்படும்படி இத்திருத்தங்கள் காட்டப்பட்டன. இவற்றை அப்புத்தகப்பதிப்பாளர்கள் கண்ணுற்றுப் பொருந்துமெனத் தோன்றினால் இனிப்பதிக்கும் பதிப்புக்களைத் திருத்திப்பதிப்பிக்கலாம். அல்லது உள்ளபடியே பதித்தாலும் அவ்வவ்விடங்களுக்குநேரே கீழ்க்குறிப்பிலாவது, அநுபந்தமாயாவது சேர்த்து இத்திருத்தங்களைப் பதித்துச் செந்தமிழ் வெளியீடென்பது தோன்றக்குறிப்பிடுதல் நலம்.

திரு. நாராயணையங்கார்,
பத்திராசிரியர்.

---

*நித்தியத்தன்மையாவது தோற்றக்கேடுகளில்லாமை. இது ஆன்மாமுதலியவற்றிலுள்ளது.

†நாச மின்மையாவது அழிவின்றியிருத்தல். இது தோற்றமுடைத்தாகிய அழிவுபாட்டபாவத்திலுமுள்ளது. இவைதம்முள்வேறுபாடு.

சங்கீதம்.

மகா-௱-௱-ஸ்ரீ V. S. இராமஸ்வாமிசாஸ்திரிகள் B.A., B.L., அவர்கள்.

இசையுடன் கூடிய ஒலியே சங்கீதம் என்பது யாவருமறிவர். இசையென்பது யாது? எனில், ஒருபொருளின்பேரில்மற்றொருபொருள் தாக்கினால் ஒலி உண்டாகும்; தாக்கப்பட்ட பொருளின் பரமாணுக்களுக்குள் அசைவுண்டாகும். அந்த அசைவால் அதின் நான்கு பக்கங்களிலும் சூழ்ந்துள்ள காற்று அசைக்கப்படும். அமைதியானதொரு நீர்நிலையின்மேல் சிறு செங்கற்கட்டியைப் போட்டால் சிறுசிறு அலைகள் உண்டாகி நான்கு பக்கங்களிலும்சூழ மண்டலவடிவமாய் விரிந்து அகன்றுகொண்டு செல்லும். அதுபோலவே அசைக்கப்பட்ட காற்றினால் ஒலி அலைகள், நான்கு பக்கங்களிலும் சூழப் பாவிச்சென்று நமது செவிகளில் நுழைகின்றன. அவ்விதமாக நுழைந்து செவித்துளைநடுவிலிருக்கிறமெல்லிய தோலிற்றாக்கி, செவிநரம்புகளின் மூலமாகமூளையைத் தீண்டுகின்றன. அதனாலேயே நமக்கு ஒலியுணர்ச்சி உண்டாகின்றது. ஆகையால் காற்றுடன் கூடிய ஒலியின் அசைவே ஒலியுணர்ச்சிக்குச் சிறந்தகாரணம்.

ஒவ்வொரு செக்கண்டிலும் (ஒரு நிமிஷத்தில் அறுபதில் ஒரு பாகம்.) ௪௭000 தடவைவரை காற்றோடு கூடிய ஒலியசைவுகள் ஏற்பட்டால் அவ்வொலி செவிப்புலனாகும் என்றும், அதற்கு மேற்பட்டுவிட்டால் செவிப்புலனாகாதென்றும் விஞ்ஞானகலைவல்லார் முடிவுசெய்திருக்கிறார்கள். ஒவ்வொரு செகண்டிலும், ௧௬ தடவைக்குக் குறைவாகும் காற்றசைவுகளால் ஒலியுண்டானால் அவ்வொலி நமக்குப் புலப்படாதென்று ஒரு பெரிய விஞ்ஞானகலைவல்லார் முடிவுசெய்திருக்கிறார்.

அந்த அசைவுகளின் சமனான அளவே (மாத்திரை) இசையின் காரணமாகும். காற்றசைவுகளிரண்டின் இடையில் உள்ள காலவரை ஒரே அளவுள்ளதாயிருக்குமானால் 'இசை' என்பது உண்டாகும். எந்த சமயத்தில் ஒலியின் மாத்திரை ஒரே அளவில் இல்லையோ அப்போது இசை யுண்டாகமாட்டாது. அதாவது இசையழியொலி (அபஸ்வரம்) யுண்டாகும். தாளமே கால அளவாதலால் அது சங்கீதத்தின் உயிர்நிலையாகும்.

இசைகளில் ஒன்று தனித்து நின்றோ அல்லது பல கூடி நின்றோ சங்கீதம் உண்டாகிறது. சங்கீதத்தால் ஆனந்தம் உண்டாகிறது என்பதைப்பற்றிச் சிறிதுரைப்பாம்.

இவ்வுலகத்தில் ஒரு பொருளும் நிரம்ப வுயர்ந்ததில்லை. ஒவ்வொரு பொருள்களிடத்தும் சிற்சில வகைகளிலாவது குறைவும் குற்றமுமிருக்கும். ஆனால் குறைவற்ற உயர்வை மனத்தில் கற்பித்துக்கொள்ளலாம் அவ்விதமாகக் கற்பித்துக்கொண்டவடிவை மனத்தில் பதித்துக்கொண்டால் அதன்படியான வடிவைப் படைத்துக்கொள்ள நம்மால் முடியும். எங்ஙனமெனில், உலகத்தில் குறைவற்றவடிவழகுடைய மனிதனைக் காண்பதரிது. எவ்வளவழகுடையவனுக்கும் ஏதேனும் ஒரு குறையிருக்கக்கூடும். அக்குறையில்லாத மற்றொருவனுடைய வடிவழகையும் மனத்துட்கொண்டு குறைவற்றிருக்கும் அழகுடைய ஒரு வடிவத்தை நாம் மனத்தால் கற்பனைசெய்யவும், அக்கற்பனைப்படிவத்தின்படியே சிற்பத்திறமையால் ஒரு அழகு நிரம்பிய வடிவத்தை யாக்கிக் கொள்ளவும்கூடும். சித்திரம் முதலான சிற்பவேலைகளின் நோக்கம் இவ்விதமாக உயர்வின் மேலான நிலைமையை உண்டாக்கிக் கொள்ளலேயாம்.

எவ்விதம் மற்றப்பொருள்களுக்கெல்லாம் உயர்வான நிலைமைக்கு ஒரு முடிவிருக்கிறதோ, அவ்விதமே ஒலியினுயர்வுக்கும் ஒரு முடிவிருக்கிறது. குழந்தைகளின் மழலைச்சொற்கள் மிகவும் இனிமையுள்ளனவாயிருக்கின்றன. மங்கையர்களின் குரல் மிகவும் இனிமையானது. பேசுபவர்களின் இனியகுரலே சொற்களின் இனிமை. இனிமையானசொற்களைக்கேட்பதில் நமக்கு எவ்வளவு இன்பமுண்டாகிறதோ அவ்வளவின்பம் கதைகளைப்படிப்பதில் உண்டாகவில்லை. ஏனெனில் இவ்விடத்தில் இசைகளின் சேர்க்கையில்லை. ஒரேகதையை வாய்மொழியாயுரைப்பதில் ஒரு சுவையும் உண்டாவதில்லை. அதேகதைதானே சுவை நூல்வல்லார் சொல்லுங்கால் மிகவும் சுவையுள்ளதாகிறது. அதுவே இசையொடு கூடுங்கால் இரக்கம், அன்பு, மகிழ்ச்சி, இவைகள் இன்னிசைகளின் மூலமாக எவ்வளவு புலப்படுத்தலாகுமோ அவ்வளவில் நூற்றில் ஒருபங்கேனும் உபநியாசங்களில் புலப்படுத்தலியலாது. மிடற்றிசையொலிக்கும் கடைசியான உயர்விருக்கிறது. அவ்வுயர்வு மிகவு மினிமையுள்ளதாயிருக்குமென்பதில் ஐயமில்லை. சாதாரணமானமிடற்றிசையினால் மன-

துக்கு சஞ்சலமேயுண்டாகும். இனிய இசைகளுடன்கூடினமிடற்றொலியால் இன்பமுண்டாகிறது. சங்கீதத்தின் மூலமாகப் பலவகையான மனப்பான்மைகளையும் வெளியிடலாம்.

அன்பு, காதல், மகிழ்ச்சி இவைகளைப் புலப்படுத்தவல்ல சங்கீதம் எக்காலத்திலும், எத்தேயத்திலும் மக்கள் தொகுதியில் காணப்படுகிறது. அச்சம், சினம், வஞ்சனை இவைகள் சங்கீதத்தில் காண்பதரிது. விருப்பு, வெறுப்பு முதலான மனநிலைமாற்றங்களைச் சங்கீதத்தின் மூலமாக வெளிப்படுத்தலியலும். போர்க்களத்தில் பேரிகை முதலான வாத்தியங்களுள்ளன; ஆனால் அவைகள் கொலைசெய்யத் தூண்டுவனவல்ல. மனக்கிளர்ச்சியை யுண்டுபண்ணக்கூடியவைகளே. நமது விருப்பம், அகங்காரம் முதலிய கெட்டகுணங்களைச் சங்கீதத்தின் மூலமாய் வெளியிடலியலாது. அவைகளை வெளிக்காட்டக்கூடிய சங்கீதம் இயற்கையில் ஏற்படவில்லை. அழுகையைப்புலப்படுத்தும் சங்கீதமு முண்டு; அது, சங்கீதங்களுக்குள் மிகவும் மனதைக் கவர்வது. சோகசங்கீதம் கடுமையானதன்று. அது அன்பு, ஆற்றாமை இவைகளை வெளிப்படுப்பது.

இனி ராகம், ராகிணிகளைப்பற்றிச் சில கூறுவோம். ஆதியில் 33 தேவதைகளிலிருந்து, 33 கோடிதேவதைகளானாற்போல, ஆதியில் ஆறு ராகங்களிலும் 36 ராகிணிகளிலுமிருந்து கற்பனையின் வல்லமையால் எண்ணிறந்தவைகளான உபராகங்களும் உபராகிணிகளுமாகப் பல்குதலடைந்து புத்திர பௌத்திரர்களுடன் ஹிந்து சங்கீதம் விளங்குகின்றது. ஹிந்துக்களின் புத்தியானது கற்பனைசெய்வதில் மகிழ்ச்சியுடையது. அவர் இயற்கையாயுள்ள பொருள்களையும் அப்பொருள்களின் ஆற்றல்களையும், முறையே, தேவரூபமாகவும், தேவிரூபமாகவும் கற்பனைசெய்து கொள்பவர். அம்முறைபற்றி ராகங்களைக் கொழுநர்களாகவும், ராகிணிகளை மனைவியராகவும் கற்பித்துக்கொண்டனர். ஒரு ராகத்துக்கு ஒரு ராகிணியே மனைவி யென்பதில்லை. ஒவ்வொருராகத்துக்கும் ஆறு, ஆறு ராகிணிகளை மனைவியராகக்கொண்டார்கள். ராகங்களுக்கு ராகிணிகள் மட்டும் போதாமல் உபராகிணிகளும் ஏற்படுத்தினார்கள். அப்பொழுது ராகங்களையும் ராகிணிகளையும் ஒன்றுகூட்டி இன்பமனுபவிக்கத் தொடங்கினார்கள். அதிலிருந்தே ராகபரம்பரை பல்குதலாயிற்று.

இந்த விஷயத்தில் சிறிது கவனிக்கவேண்டும். நாம் எந்தப் பொருளைக் காண்கிறோமோ அந்தப் பொருளின் தோற்றமே மனதில் உண்டாகிறது. புதல்வனை யிழந்த தாயின் அழுகைக்குரலை மட்டும் நாம் கேட்பதாக மனதில் வைத்துக்கொள்வோம். புதல்வனை இழந்ததுன் பத்துளழுந்தும் தாயை நாம் பாராமல் அழுகைக்குரலைக் கேட்டமாத்தி ரத்திலேயே சோகத்தின் உணர்ச்சியுண்டாகிறது.

நாம் வேறோரிடத்தில் புத்திரசோகத்தை யடைந்தவளான ஒரு தாயாரிருப்பதாக வைத்துக்கொள்வோம். அவள் அழாவிட்டாலும், அவளுடையமுகம் முதலிய அவயவங்களைப்பார்ப்பதால், அவள் மனோ வேதனையையனுபவிப்பதாக உணர்கிறோம். அவளது முகமண்டலத் தின் உருவம் நமது மனதில் பதிந்து விடுகிறது. எப்பொழுது அதே விதமான முகமண்டலத்தை நாம் காண்கிறோமோ, அப்பொழுது அதே விதமான சோகமே நமது மனதில் புலனாகின்றது.

ஆகையால் த்வனியும் உருவமும் சோகத்தின் அடையாளங்கள். சப்தமும், அவயவங்களின் தோற்றமும் இரண்டும் மனதில் விளங்கு கின்றன. த்வனி, மூர்த்தி இவைகளின் பரஸ்பர ஸம்பந்தத்தை யவலம் பனஞ்செய்தே, நமது முன்னோர்கள், ராகங்களையும் ராகிணிகளையும் கல்பனைசெய்திருக்கிறார்கள். அவ்விதம் கல்பனை செய்தலானது, நமது முன்னோர்களான ஆரியர்களின் கவித்வசக்தியையும் கல்பனாசக்தியை யும் விளக்கிக்காட்டுகிறது. நாம் பூர்வபுருஷர்களின் கீர்த்தியைப்பற்றி யெவ்வளவுக் கெவ்வளவு ஆலோசிக்கிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு, அவர்களின்மகாநுபாவத்தன்மையைக் கண்டு ஆச்சரியமடை கிறோம். இரண்டொரு உதாஹரணங்களைக் காட்டுவோம். 'தோடி' என்ற ராகிணியை யநேகர்கள் கேட்டிருப்பார்கள். ரஸிகர்கள் அதைப் பாடக்கேட்டுச் சொல்லொணாத உற்சாகத்தை யடைவார்கள் என்று சொல்லுதல் மிகையாகும். நாம் எதை ஆவேசம் என்று சொல்கிறோ மோ அதுவே இந்த உற்சாகத்தின் ஒரு அம்சமாகும். அது ஒரு அம்சமாத்திரமே. அத்துடன் போகத்தில் ஆசையையும் சேர்க்கிறோம். அந்தப்போகாபிலாஷை கெட்டவிருத்தியல்ல. எது நிர்ம்மலமான சுகத்தைத்தருவதோ, அன்னிய ஜனத்தையபேக்ஷிக்காததோ, கேவலம் ஆத்மாவைப் பற்றியதோ, அவ்விதமான போகவாசையே உண்டாகிறது.

அந்தப் போகாபிலாஷைக்கு எல்லையில்லை, முடிவு இல்லை, திருப்தி யில்லை, தடையில்லை, கட்டுப்பாடில்லை.

அவ்வித போகாபிலாஷையால் நாம் மிகவும் விளங்குகிறோம். 'தோடி.' ராகிணியை உருவத்துடன் கல்பனை செய்த மூர்த்தியானது மிகவும் அழகு வாய்ந்த யுவதி; வஸ்திராலங்காரங்களுடன் விளங்கு பவள்; ஆனால் விரஹத்துடன் கூடியவள் என்று கல்பனைசெய்திருக்கி றார்கள். அவளுடைய ஆசைக்கு நிவர்த்தியில்லையென்கிற காரணத்தி னால் அவளை விரஹிணியாகக் கல்பனை செய்திருக்கிறார்கள். இந்தச் சுந்தர யுவதி வனங்களில் விளையாடுகிறவள். கானகத்தின் நடுவில் தனி மையாயிருந்துகொண்டு, மதுபானத்தினால் உன்மாதம்பிடித்தவளாயி னள்; வீணையை வாசித்துக் கானம் செய்வதால், அவளது ஆடையாபா ணங்கள் நழுவிவிழுந்தன. காட்டுமான்பேடுகள் அவளது எதிரில் வந்து அசைவற்று நிற்கின்றன.

இந்தச்சித்திரம் சொல்லொணா அழகுவாய்ந்தது மட்டுமல்ல. ஸௌந் தர்யத்தைத்தவிர்த்து வேறொரு சமத்கார குணமுமுள்ள இதுவே தோடிராகிணியின் யதார்த்தமான உருவம். அந்தராகிணியைச்செவி யுற்ற மாத்திரத்தில் மனதில் எந்த உணர்ச்சிஉண்டாகிறதோ, மேலே விவரிக்கப்பெற்ற மூர்த்தியைக்கண்டமாத்திரத்தில் அதேவிதமான உணர்ச்சியுண்டாகும். இவ்விதமாகவே மற்றராகிணிகளுடைய உருவங் களும் அழகுவாய்ந்தவைகளாக இருக்கின்றன. தீபக ராகத்தின் பார்யை "மூல்தானி" என்பது. அது தீபக ராகத்தின் பக்கத்திலே நிற் கிறவளாயும், ஸ்வர்ணநிற முள்ளவளாயும் சிவப்பாடையுடுத்தினவளா யும் உள்ள சுந்தரியாயும் விளங்குகிறாள்.

பைரவியென்பாள் வெள்ளைவஸ்திரம்தரித்து, அநேகஅணிகலன் களைப்பூண்டவள். மற்றராகிணிகளும் இவ்விதமாகவே விளங்குகின்றனர். இவைகளையுருவகப்படுத்துவதில் அபிப்பிராயபேதங்கள் இருக்கின்றன. எவ்விதம் விஞ்ஞானசாஸ்திர விஷயங்களில் பண்டிதர்களுக்குள் அபிப் பிராயபேதமிருக்கிறதோ, அவ்விதமே கல்பனையிலிருந்து உண்டான வியாபாரங்களில் ரிஷிகளுக்குள் மதபேதமிருக்குமென்பதில் ஆச்சரிய

மொன்றுமில்லை. ஆனால் வெவ்வேறு சப்தங்களின் மூலமாக வெவ்வேறு உணர்ச்சிகள் உதிக்கின்றன. மதுரமான ஸ்வரங்களிலிருந்து சோகத்தையோ, பிரேமையையோ, உன்மாதத்தையோ, தெரிந்துகொள்ளக்கூடுமானால், ஸ்வரபேதத்தால் ஒரேவிதமான உணர்ச்சியை (ஹாவத்தை) எப்படி யடையமுடியும் என்று தார்க்கிகர்கள் வாதம் செய்யக்கூடும். ஸம்ஸ்காரத்தினாலேயே அவ்விதம் ஏற்படக்கூடுமென்பது இந்த ஆக்ஷேபணைக்குச் சரியான ஸமாதானமாகும். நமது ஸங்கீத வித்தையில் ஸ்வரங்களின் பெருக்கம் (ஸாஹாய்யம்) மிகவும் அதிகம்; மாறுபாடுகளோ எல்லையற்றவை. கேவலம் சிக்ஷையாலும் அப்பியாஸத்தாலுமே அவைகளின் தாரதம்யத்தை யறிந்துகொள்ளமுடியும். ஸாமான்யமான அப்பியாஸபலத்தால் குழந்தைகள் வாத்தியங்களைக்கேட்டவுடன் குதிக்கத் தொடங்குகின்றன. அவ்விதமே பிராசீன ஹிந்துக்கள் 'ஆகமனீ'யென்ற ராகத்தைக் கேட்டமாத்திரத்தில், அழத்தொடங்குவார்கள். இவ்விதமான அப்பியாஸம் வேரூன்றினால், அதாவது நன்றாய்ச் சிக்ஷிக்கப்பட்டால் ஹாவங்களின் (உணர்ச்சிகளின்) மிகுதி ஏற்படும். தொடர்படையாய் (புங்கானுபுங்கமாய்) அனுபவமும் ஏற்படும். சிக்ஷையற்றமூடர்கள் எதைப்பார்த்துச் சிரிப்பார்களோ, ரஸிகர்கள் அதைக்கண்டு விசனிப்பார்கள். எவர்களுக்கு ஸம்ஸ்காரமில்லையோ அவர்களுக்குச் சங்கீத ஸுகானுபவமுண்டென்பது வீண்பிரமையே. நல்லஸ்வரம் யாவருக்கும் பிரியமானதென்பதை யொத்துக்கொள்ளவேண்டும். ஸ்வாபாவிகமான தாளஞானம் எல்லோருக்கும் உண்டு. ஆனால் உயர்ந்தபடியான ஸங்கீதத்தைக் கேட்டுச் சுகானுபவமடைவது சிக்ஷையன்னியில் கிடைக்காது. அப்பாஸமற்றவனுக்கு வெங்காயத்தையுண்பதில் எவ்விதம் வெறுப்பு ஏற்படுமோ, அவ்விதமே உயர்ந்ததான ஸங்கீதத்தைக் கேட்பதில் அசிக்ஷிதனான மனிதனுக்கு வெறுப்பு ஏற்படும்.

ராகராகிணிகள் நிறைந்ததான நமது ஸங்கீதத்தைக்கேட்க யூரோப்பியர்கள் விரும்பமாட்டார்கள். அவ்விதமே மேல்நாட்டுக்கானமும் நமக்குப்பிடிக்கவில்லை. அப்பியாஸ மின்மையாலேயே அப்படி வெறுப்புண்டாகிறது. எவ்விதம், ராஜநீதி, தர்மநீதி, விக்ஞானம், ஸாகித்யம் முதலானதுகளைத் தெரிந்துகொள்வது மனுஷ்யர்களுக்கு ஆவசியகமோ,

எவ்விதம் சரீரத்தை ஸ்வஸ்தமாய்க் காப்பாற்றுவதற்கு வியாயாமம் (சரீரப்பயிற்சி) ஆவசியகமோ, அப்படியே சித்தத்தின் தெளிவுக்காகச் சிறந்த ஸங்கீதத்தை யப்பியாஸம் செய்வதும் ஆவசியகமானது. ராஜகுமாரர்களுக்கும், ராஜகுமாரிகளுக்கும், கற்றுக்கொடுக்கவேண்டிய விஷயங்களில் முதன்மையானது ஸங்கீதவித்தையே என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஸங்கீதத்தை நிஷித்தமென்று தள்ளிவிடுதல், நமது அநாகரீகத்தன்மையைக்குறிக்கும்.

நமது வீட்டு ஸ்திரீகள் ஸங்கீதவித்யையை யப்யஸித்திருந்தால் கிருகங்களில் விமலமானதும், தூய்மையுள்ளதுமான ஆனந்தப்பெருக்கம் ஸ்தாபிக்கப்பெற்றதாக ஆகும். ஸங்கீதத்தின் ஆனந்தத்தால் கட்குடித்தல் முதலிய கெட்டவழக்கங்களும் விலகிவிடும். நிர்ம்மலமான ஆனந்தமின்மையாலேயே நந்தேயத்தில் அநேகர்களுக்கு மதுபானத்தில் விருப்பமேற்படுகிறது. நமது கிருகங்களின் குழந்தைகளுக்கோ, ஸ்திரீகளுக்கோ நிர்மலமான ஸங்கீதவித்யையைக் கற்பித்துக் கொடுத்திருந்தால் சங்கீதம் கேட்கவேண்டுமென்று வேசிகளுடைய வீடுகளுக்குச் செல்கிற கெட்டபழக்கமும் ஒழிந்தேபோகும்.

முற்றிற்று.

ஸ்ரீ:

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் 33-ம் வருடக்கொண்டாட்டம்.

நாளது பவ௵ ஆடிமீ ௩௧௳ அன்று பகல் $10\frac{1}{2}$ மணிக்கு மேல் சென்னைமாகாணக்கவர்னர் மஹாகனம்பொருந்திய கான்பகதூர் ஸர் முகம்மதுஸ்மான்ஸாஹிப் பகதூர் அவர்கள் பாண்டுவாத்திய கோஷத்துடன் தமிழ்ச்சங்கத்தாரால் அழைக்கப்பட்டு சங்கக் கட்டிடத்துக்கு விஜயம்செய்தார்கள். அப்போது மதுரை ராமநாதபுரம் ஜில்லாக்களிலுள்ள முதன்மையான கனதனவான்களும் சென்னை ராஜதானியிலும், இலங்கையிலுமுள்ள தமிழ் வித்வான்களும் தமிழ்ச்சங்கத்தலைவரான சேதுமன்னரவர்களுடன் சிறப்பாகக் கூடியிருந்தனர்.

அப்போது தமிழ்ச்சங்கப் பெருமைகளைத் தெரிவித்து மஹாமஹோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களும், ராவ்ஸாஹிப் வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்களும், சேது ஸமஸ்தானமஹாவித்வான் ரா. ராகவையங்காரவர்களும், கீழக்கரை வித்வான் சையிது முஹம்மது ஆலிம் புலவரவர்களும் தமிழ்மொழியைத் தமிழ்நாட்டரசர்கள் பாதுகாத்துவந்தனர் என்றும், அம்முறையாலும் மாட்சிமை தங்கிய கவர்னரவர்கள் தமிழ்ச்சங்கத்தை அபிமானித்தற்கு உரிமையுடையவர்களென்று சிறப்பித்துப்பேசி அவர்களைச் சங்கத்தின் கெவுரவ அங்கத்தினராகவேணுமென்று பிரார்த்தித்துக் கேட்டுக்கொண்டார்கள். அதற்கு இசைந்தருளிய கவர்னரவர்களைச் சங்கத்தின் கௌரவ அங்கத்தினராகச்சேர்த்துக்கொண்டதற்கு அறிகுறியாக, சங்கத்தின் நிரந்தர அக்கிராசனாதிபதியான மாட்சிமைதங்கிய ஷண்முகராஜேசுவரநாகநாத சேதுபதியவர்கள் ஒரு சால்வை வெகுமதியாகச் சார்த்தியுபசரித்து அன்று நடக்கும் சங்க வருஷக்கொண்டாட்டத்துக்குச் சபாநாயகராயிருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்.

மாட்சிமை தங்கிய கவர்னரவர்களுக்குச் சங்கத்தாரால் வரவேற்புப் பாடல்கள் படித்தளிக்கப்பட்டன. அதற்குக் கவர்னரவர்கள் வந்தனமளித்தார்கள்.

சென்னை கெவர்ன்மெண்டு டெவலப்மெண்டு மந்திரி மஹாகனம் பொருந்திய P. T. ராஜன் அவர்கள் எழுந்து சேதுபதியவர்களது பரம்பரையின் சிறப்பைப் பாராட்டிப்பேசி, சேதுபதிகள் தமிழ்ப்பாஷை, சங்கீதம், இவற்றை ஆதரித்து வித்வான்களைப் போற்றிவந்தவர்கள் என்றும், அவர்களுட்சிலர் தமிழில் நல்ல பாண்டித்திய முள்ளவர்களாயுமிருந்திருக்கிறார்களென்றும், காலம்சென்ற ராஜராஜேசுவர முத்துராமலிங்க சேதுபதியவர்களும் தமிழில் பாண்டித்திய முடையவர்களென்றும், தமிழ்வித்வான்களையும் தமிழ்ச்சங்கத்தையுமவர்களாதரித்து வந்தார்களென்றும், தமிழ்ச்சங்க அபிவிருத்திக்கு அவர்கள்காரணமென்றும், பொதுஜன நன்மைக்கு அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளும் செய்துள்ள வேலைகளும் நாடறிந்தவை யென்றும் சுருக்கமாகச் சொல்லி, சென்ற ராமநாதபுரம் ராஜாவாகிய முத்துராமலிங்கசேதுபதியவர்களின் திருவுருவப்படத்தைத் திறந்துவைக்கவேண்டு மென்று மாட்சிமை தங்கிய கவர்னரவர்களை வேண்டிக்கொண்டார்கள். மாட்சிமை தங்கிய கவர்னரவர்கள் அத்திருவுருவப்படத்தைத் திறந்துவைத்து அதுவிஷயமாகத் தமக்குள்ள சந்தோஷத்தை வெளியிட்டார்கள்.

சங்கத்தின் கௌரவகாரியதரிசியாகிய மகா-ா-ா-ஸ்ரீ V. சுந்தரமையர் B.A., B.L., அவர்களால், சங்கம் செய்துள்ள காரியங்களையும், அதன் முயற்சிகளையும் சபையோர்க்குப் புலப்படுத்தற்குரிய அறிக்கைப் பத்திரம் படிக்கப்பெற்றுச் சபையோர்களா லங்கீகரிக்கப்பட்டது.

சங்கத்தின் பலவகைப் பரீக்ஷைகளிலும் முதற்றரமாகத் தேர்ச்சியடைந்தவர்களுக்கு மாட்சிமைதங்கிய கவர்னரவர்களால் தங்கப்பதக்கங்களும், வெள்ளிப்பதக்கங்களும் பரிசளிக்கப்பட்டன.

அண்ணாமலை சர்வகலாசாலைத் தமிழ்ப்போசிரியர் மகா-௱-௱-ஸ்ரீ S. சோமசுந்தரபாரதியாரவர்கள்கேட்டுக்கொண்டபடி தமிழ்ச்சங்ககலாசாலைத் தலைமையாசிரியர் ஸ்ரீமத் திரு. நாராயணையங்காரவர்கள் தமிழ்த்தொண்டு புரிந்துவந்திருப்பதற்கு மகிழ்ந்து பலகனவான்களாலுதவப்பட்டுக் கூடுதலான ரூ. 1500-க்கு மேலுமுள்ள பொற்கிழியைச் சால்வையுடன் சங்கத்தலைவரவர்கள் கொடுக்க வாங்கி மாட்சிமைதங்கிய கவர்னரவர்கள் பரிசளித்தார்கள். பரிசுபெற்ற தலைமையாசிரியரவர்கள் மாட்சிமை தங்கிய கவர்னரவர்களை வாழ்த்தி, தாம் சொல்லக்கருதி யெழுதிய பத்திரிகையைச் சங்கத்தின் உப-அக்கிராசனாதிபதி ஸ்ரீமத் T. C. ஸ்ரீநிவாஸய்யங்காரவர்களிடம் கொடுக்க அவர்கள் கெம்பீரமான தொனியுடன் படித்தார்கள்.

பின்பு சங்கப்புத்தகசாலையின் அபிவிருத்திக்காக, மதுரை புஸ்தக வியாபாரம் மகா-௱-௱-ஸ்ரீ இ. மா. கோபாலகிருஷ்ணக்கோனாரவர்கள் முன்வந்து ரூ. 2000 சங்கத்துக்கு நன்கொடை கொடுப்பதாக வாக்களித்திருப்பது மாட்சிமைதங்கிய கவர்னரவர்களால் சபையில் வெளியிடப்பட்டது.

கடைசியாக, மாட்சிமைதங்கிய கவர்னரவர்கள் சங்கத்தார் செய்த உபசாரங்களுக்கும் வாழ்த்துக்களுக்கும் கௌரவங்களுக்கும் வந்தனம் கூறி, சென்னை லெஜிஸ்லேட்டிவ் கவுன்ஸில் அங்கத்தினராகவும், இராமநாதபுரம் ஜில்லாபோர்டுத்தலைவராகவும், தமிழ்க்கல்விப் போஷகராகவுமிருந்து மிகுந்தநன்மைகள் செய்துள்ள சென்ற இராமநாதபுரம்ராஜா அவர்களின் திருவுருவப்படத்தைத் திறந்ததால் தாம்மிகுந்த சந்தோஷமடைவதாகத் தெரிவித்தார்கள்.

தமிழ்க்கல்வியபிவிருத்தி சம்பந்தமாகத் தமிழ்ச்சங்கம் செய்துவரும் முயற்சிகளையும் இதுவரை செய்துள்ள நல்ல காரியங்களையும் மாட்சிமையுள்ள கவர்னரவர்கள் புகழ்ந்து பாராட்டினார்கள்.

தமிழ்ச்சங்கஸ்தாபனத்தை மிகவும் அன்புடன் பரிபாலித்துவரும் மாட்சிமைதங்கிய இராமநாதபுரம் ராஜா அவர்களுக்கும் மகா-௱-௱-ஸ்ரீ T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்களுக்கும் தமிழ்ச்சங்கம் நன்றிபாராட்ட வேண்டுமென்றுசொல்லித் தமிழ்ச்சங்கமின்னும் மேன்மேலும் வளர்ச்சியடையவேண்டுமென்று தாம் விரும்புவதாகவும் தெரிவித்தார்கள். உடனே வாழ்த்துப்பாக்கள் பாடப்பெற்றன. மகா-௱-௱-ஸ்ரீ T. C ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் வந்தனோபசாரமொழிகூறி மாட்சிமைதங்கிய கவர்னரவர்களுக்குச் சங்கவித்வான்களை யறிமுகப்படுத்த, அவர்களும் இன்மொழி கூறிச்சென்றார்கள். மகா-௱-௱-ஸ்ரீ T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் மாட்சிமைதங்கிய கவர்னரவர்களுக்கு வந்தனோபசாரம் சொல்லி வழியனுப்பி வந்து சபையோருக்குச் சந்தனதாம்பூலம் வழங்கப் பெற்றுக்கொண்டு எல்லோரும் போஜனம்புரியச் சென்றார்கள்.

அன்று பிற்பகலில் மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர், உ. வே. சாமிநாதையரவர்கள் சபாநாயகராகவீற்றிருக்க, கும்பகோணம் டவுன்ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத், ஊ. சா. வேங்கடராமையரவர்கள் தாம் எழுதிவந்த 'வெள்ளிவீதியார்' என்ற பொருளுரையைப் படித்தார்கள். அதுபற்றி, சேதுசமஸ்தான மஹாவித்வான் பாஷாகவிசேகரர் ஸ்ரீமத் ரா. ராகவையங்காரவர்கள் சபையோர் மனமகிழுமாறு மிகவும் அரியதொரு பிரசங்கம்செய்து, பின் புத்தகவியாபாரம் ஸ்ரீமான். இ. மா. கோபாலகிருஷ்ணக்கோனாரவர்கள் 2000 ரூபா. சங்கத்துக்கு நன்கொடையளிப்பதாகச் சொல்லியதை மிகவும் பாராட்டிப் பேசினார்கள்.

பின்பு, 'தமிழும் தமிழரதுகடமையும்' என்பது பற்றி திரிச்சி ஸெண்ஜோஸப்காலேஜ் பண்டிதர் ஸ்ரீமத், நடேசமுதலியாரவர்கள் மிகவும் தெளிவாகப்பேசிச்செந்தமிழின் முந்திய தொகுதிகளின் ஆராய்ச்சித் திறங்களையும் ஸ்ரீமத் ரா. இராகவையங்காரவர்களின் புலமையையும் பாராட்டிப் பேசினார்கள்.

பின்பு மதுரை அமெரிக்கன்காலேஜ் பௌதிகசாஸ்திர ஆசிரியர், ஸ்ரீமத், N. R. கிருஷ்ணமூர்த்தியையரவர்கள் 'பௌதிகப்பொருள்களின் நிலைக்களம்' என்னும் விஷயமாக அணுக்களின் நுணுக்கங்களைப் பற்றி ஆங்கிலமொழிவிரவாத செவ்விய தமிழ்நடையில் தெளிவாகப் பேசினார்கள்.

சபாநாயகரவர்கள் உபந்யாசங்களின் தகுதிக்கேற்ப அபிப்பிராயங் கூறிச்சிறப்பித்தார்கள்.

16-8-34 உ அன்று மூற்பகல் எட்டயபுரம் சமஸ்தானம் வியாகரண வித்வான் ஸ்ரீமத். திரு. வி. சாமிஐயங்காரவர்கள் 'கம்பரும் ஸம்ஸ்கிருதமும்' என்ற விஷயமாகப் பிரஸங்கித்தார்கள். அதனால் 'தேவபாடையினிக்கதை செய்தவர் மூவர்' என்று கம்பர் கூறியபடியே அம்மூவர் நூலுமே கம்பராமாயணத்துக்கு முதனூல் என்பது நன்கு விளங்கிற்று.

பின்பு பண்டித. அ. கோபாலையரவர்கள் 'நாட்டுமொழி' (தேசபாஷை) என்ற விஷப மெழுதிப்படித்தார்கள். அதுகொண்டு மூற்காலத்துக் கல்விபயிற்று முறைகளையும், வழக்கங்களையும் இழக்காமல் கணக்கு முதலியவற்றையும் சிறுவர்களுக்குக் கற்பிக்கவேண்டுமென்று காட்டப்பட்டது.

பின்பு, பண்டித, V. S. ராஜஐயனார் அவர்கள் 'தமிழுரைநடை' என்பதுபற்றி மிகவும் இனிமையாகப் பேசிவிட்டுத் தமிழ்ப்புலவர்களுக்குப் பரிசளிக்கும் முறையைப் பாராட்டியுரைத்தார்கள்.

சபாநாயகரவர்கள், பிரசங்கங்களைப்பற்றிய அபிப்பிராயங்களைத் தெரிவித்து முடித்தார்கள்.

அப்போது சங்கத்தின் உபஅக்கிராசனாதிபதியான ஸ்ரீமத். T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் சபையோர்களுக்கும், வித்வான்களுக்கும், தமிழபிமானிகளுக்கும் வந்தனோபசாரம் சொல்லி, சந்தன புஷ்ப தாம்பூலங்கொடுக்க வருஷக்கொண்டாட்டம் இனிது நடைபெற்றுப் பூர்த்தியாயிற்று.

T. K. இராமாநுஜையங்கார்,
உதவிப்பத்திராசிரியர்.

1934-ஆம் ஆகஸ்டுமீ 14உ (பவ-ஆம் ஆடிமீ 30உ) மாலை 5-மணிக்குக் கூடிய மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகஸபையில் முடிவுசெய்யப்பெற்ற தீர்மானங்களின் விவரம்.

1. மாட்சிமைதங்கிய கனம் இராமநாதபுரம் ராஜா R. ஷண்முகராஜேசுவர நாகநாதஸேதுபதிமஹாராஜா அவர்கள்,—அக்கிராசனாதிபதி.
2. மகா-ள-ள-ஸ்ரீ T. C. ஸ்ரீநிவாஸையங்கார் அவர்கள், B.A., B.L., M.L.C., —உப-அக்கிராசனாதிபதி.
3. ,, V. S. இராமஸ்வாமி சாஸ்திரியார் அவர்கள், B.A., B.L.,
4. ,, V. சுந்தரமையர் அவர்கள் B.A., B.L.

இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்.

I. 1934-ஆ ஏப்ரல்மீ முதல் ஜூலைமீ முடிய உள்ள வரவு செலவு கணக்குகள் அங்கீகரிக்கலாயின.

II. மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினராகவேண்டுமெனக் கோரிய மதுரை, அட்வொகேட், மகா-ள-ள-ஸ்ரீ L. கிருஷ்ணஸாமிபாரதி M.A., B.L., அவர்களை அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

III. சங்கவருஷோத்ஸவத்தில் வாசிக்கத்தயாரிக்கப்பெற்ற அறிக்கைப் பத்திரம் அங்கீகரிக்கலாயிற்று.

IV. சிவகெங்கை ஜெமீனிலிருந்து தமிழ்ச்சங்கத்துக்கு மாதந்தோறும் சந்தா அனுப்பிவருவதாக மாட்சிமைதங்கிய கனம் சிவகெங்கை ராஜா அவர்கள் அன்புடன் வாக்களித்திருப்பதற்கு சங்கத்தாரின் வந்தனத்தைத் தெரிவிக்கும்படி தீர்மானிக்கலாயிற்று.

V. ஆபீஸ் மெமோபிரகாரம் சங்கவருஷோத்ஸவச்செலவுக்காக பட்ஜெட் தொகைக்குமேல் ரூ. 400 அதிகம் சாங்ஷன் செய்யலாயிற்று.

VI. சங்கவருஷோத்ஸவத்தில் பண்டிட் மகா-ள-ள-ஸ்ரீ திரு. நாராயணையங்காரவர்களுக்குப் பொற்கிழி பரிசளித்தல் விஷயமாக எழுதிய மெமோ அங்கீகரிக்கப்பெற்றது. சால்வையின் கிரயத்தைச் சங்கத்தினின்றும் கொடுக்கும்படி தீர்மானிக்கலாயிற்று.

மதுரை.
14—8—'34.

R. Shanmuga Rajeswaran,
அக்கிராசனாதிபதி.

௮

1934-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 15-ஆம் தேதி (பவ வருஷம் ஆடி மாதம் 31-ஆம் தேதி) புதன் கிழமை மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் கூடிய மதுரைத்தமிழ்ச் சங்கமகாசபையோரால் ஆலோசித்துத் தீர்மானிக்கப் பெற்ற விஷய விவரக்குறிப்பு.

---

1 மகா-ள-ள-ஸ்ரீ மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி Dr. வே. சாமிநாதையரவர்கள்.
2 ,, T. C. ஸ்ரீநிவாஸையங்கார் அவர்கள் B.A.B.L., M.L.C. (உப-அக்கிராசனாதிபதி.)
3 ,, V. சுந்தரமையர் அவர்கள் B.A., B.L., (கௌரவ காரியதரிசி.)
4 ,, ரா. இராகவையங்கார் அவர்கள்
5 ,, V. P. சுப்பிரமணிய முதலியார் அவர்கள்.
6 ,, திரு. வீ. சாமிஐயங்கார் அவர்கள்.
7 ,, திரு. நாராயணையங்கார் அவர்கள்.
8 ,, S. சோமசுந்தரபாரதி அவர்கள். M.A.,B.L.
9 ,, L. கிருஷ்ணசாமிபாரதி அவர்கள். M.A., B.L.
10 ,, பண்டித. அ. கோபாலையரவர்கள்
11 ,, இ. மா. கோபாலகிருஷ்ணக்கோனாரவர்கள்.
12 ,, ஆ. கார்மேகக்கோனார் அவர்கள்.
13 ,, N. R. கிருஷ்ணமூர்த்தி ஐயரவர்கள்.
14 ,, M. நடேசமுதலியார் அவர்கள்.
15 ,, செய்யிது முஹம்மது ஆலிம்புலவரவர்கள்.
16 ,, பண்டித. வ. சு. இராஜஐயனார் அவர்கள்.
17 ,, P. R. ஐயாசாமி ஐயரவர்கள் B.A., L.T.
18 ,, ஷ. சா. வேங்கடராமையர் அவர்கள்.
19 ,, ஆழ்வாரையங்கார் அவர்கள்.
20 ,, N. R. சுப்பிரமணியசர்மா.
21 ,, V. S. இராமஸ்வாமிசாஸ்திரியார் அவர்கள்.
22 ,, E. S. வரதராஜையரவர்கள்.
23 ,, உ. நா, அப்பாஸாமிஐயரவர்கள்.
24 ,, இரத்திநேச்வரஐயர் அவர்கள்.
25 ,, திருமலைஜக்கையா அவர்கள்.

இவர்கள் வந்திருந்தார்கள்.

மகா-ள-ள-ஸ்ரீ மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர், உ. வே. சாமிநாதையரவர்கள், சபைத்தலைமை வகித்தார்கள்.

தீர்மானங்கள்.

அண்ணாமலை சர்வகலாசாலைக்கு இந்தத்தமிழ்ச்சங்கப் பிரதிநிதியாக இந்தச் சங்க உபாக்கிராசனாதிபதி ஸ்ரீமான் T. C. ஸ்ரீநிவாஸையங்கார் B.A.,B.L, M.L.C. அவர்களைத் தெரிந்தெடுக்கலாயிற்று.

பிரேரேபகர்: மகா-ள-ள-ஸ்ரீ S. சோமசுந்தரபாரதி M. A. B. L. அவர்கள்

ஆமோதகர்: மகா-ள-ள-ஸ்ரீ M. நடேசமுதலியார் அவர்கள்

எல்லோராலும் ஏகமனதாக அங்கீகரிக்கலாயிற்று.

இனிச் சர்வகலாசாலைகள் முதலிய வேறு கழகங்களுக்கு இந்தச்சங்கப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கச் சந்தர்ப்பம் ஏற்படும்போது, சங்க மகாசபை கூட்டும் அவசியமில்லாமலே அங்கத்தினர்களுக்கு அபேக்ஷகர்கள் பெயர்கள் குறித்த சீட்டுக்களை அனுப்பி அபிப்பிராயத்தைக்குறித்து வாங்கிப் பெரும்பாலோரால் நியமிக்கப்படுபவரையே தேர்ந்தெடுக்க வேணுமென்றும், இதைநடத்துவதற்கான நிர்வாகமுறைகளை ஏற்படுத்தி நடத்தவேண்டுமென்றும் தீர்மானிக்கலாயிற்று.

பிரேரேபகர்: மகா-ள-ளஸ்ரீ S. சோமசுந்தரபாரதி M. A. B. L. அவர்கள்.

ஆமோதகர்: மகா-ள-ள-ஸ்ரீ M. நடேசமுதலியார் அவர்கள்.

எல்லோராலும் ஏக மனதாக அங்கீகரிக்கலாயிற்று.

இந்தச்சங்கத் தனித்தமிழ்ப்பரீக்ஷைகளில் இப்போதுள்ளபடியே ஏழுபாட விணாப்பத்திரங்கள் இருக்கவேண்டுமென்றும், ஆனால் அவைகளை இலக்கண விணாப்பத்திரம் 2, செய்யுளியற்றல் விணாப்பத்திரம் 1, ஆக மூன்று விணாப்பத்திரங்களும் முதல் வகுப்பும், செய்யுட்பாட இலக்கிய விணாப்பத்திரம் 2, வசன பாடவிணாப்பத்திரம் 1, வசனக்கட்டுரைவிணாப் பத்திரம் 1 ஆக நான்குவிணாப் பத்திரங்களும் இரண்டாவது வகுப்புமாக இருவகுப்பாகவைத்து, தனித்தனி ஏழு விணாப்பத்திர விடைகள் சம்பந்தமாயும் 25% அம்சமும், ஒவ்வொருவகுப்புக்குள்ள பத்திரங்களின் மொத்தத்தில் $33\frac{1}{3}$% அம்சமும், இருபெருவகுப்பும் சேர்த்து மொத்தத்தில் 40% அம்சமும் வாங்குபவர்களே தேர்ந்தவர்களாகக் கருதப்படுவார்களென்றும் தீர்மானிக்கலாயிற்று.

பிரேரேபகர்: மகா-ள-ள-ஸ்ரீ S. சோமசுந்தரபாரதி M. A. B. L. அவர்கள்.

ஆமோதகர்: மகா-ள-ளஸ்ரீ ராவ்ஸாஹிப், V, P, சுப்பிரமணிய முதலியார் அவர்கள்.

எல்லோராலும் ஏகமனதாக அங்கீகரிக்கலாயிற்று.

இப்பொழுது Temporary காரியதரிசியாக இருக்கிற மகா-ள-ள-ஸ்ரீ V. சுந்தரமையர் B.A., B.L., அவர்களை இச்சங்கத்தின் கௌரவகாரியதரிசியாக இருக்கும்படி தீர்மானிக்கலாயிற்று.

பிரேரேபகர்: மகா-ள-ள-ஸ்ரீ S. சோமசுந்தரபாரதி M. A. B. L. அவர்கள்.

ஆமோதகர்: மகா-ள-ள-ஸ்ரீ M. நடேசமுதலியார் அவர்கள்.

எல்லோராலும் ஏகமனதாக அங்கீகரிக்கலாயிற்று.

மதுரைத்தமிழ்ச்சங்கம்
15—8—34.

வே. சாமிநாதையர்,
சபைத்தலைவர்.

மடலே பொருளென மதித்தல்.

114. அடலேற தேறுங் கலைசைத் தியாக ரருட்பணிக்காம்
உடலே றுயிரென்ன வென்னுயிர்க் கோருயி ராவிருந்தார்
கடலேய் விழிதந்த காமக் களிமயக் கத்தைநெஞ்சே
மடலே யமிர்தசஞ் சீவினி யாக்கொண்டு மாற்றுவமே. (௨௧)

பாங்கிக்கு உலகின்மேல்வைத்து உரைத்தல்.

115. வெய்வார்மென் றோளியர் காதற் கடலிடை வீழ்ந்துமிகச்
சாய்வார் கிழிபிடித் தூர்வார் மடல்பின் றடங்குவடு
பாய்வா ரிமாசல ராசன் குமாரி பணைமுலைகள்
தோய்வார் கலைசைத் தியாகேசர் வெற்பிலஞ் சொற்கிளியே. ()

அதனைத் தன்மேல்வைத்துச் சாற்றல்.

116. காசியின் மேன்மைக் கலைசைத் தியாகர்மெய்க் காட்சியைப்போல்
பூசிவெண் ணீறெருக் கம்பூ வணிந்தென்பு பூண்டுநல்லாய்
பாசிழை யார்வடி வார்படங் காட்டிப் பனைமடலாம்
வாசியை நாளையுன் னூர்வயி னூர்ந்து வருகுவனே. (௨௩)

பாங்கி தலைமகளவயவத்தருமை சாற்றல்.

117. மத்தம் புனையுங் கலைசைத் தியாகர் வரைக்கரசே
நத்தஞ்சு கந்தரத் தாள்கருங் கூந்த னறையெழுதி
முத்தம் பதிந்த முறுவற்செவ் வாயின் மொழிவரைந்திச்
சித்தம் பரநடுத் தீட்டுவ ரோவந்தத் தேவருமே. (௨௪)

---

114. இருந்தார் - இருந்த தலைவியினுடைய. மடல் - பனைமடலாற்செய்த குதிரை. அமிர்த சஞ்சீவினி - மரணத்தைநீக்குவதொரு மூலிகை.

115. காதற்கடல் - காமமாகிய கடல். சாய்வார் : எழுவாய். கிழி - தலைவன்தலைவியரின் உருவமெழுதப்பட்ட படத்தை. குவடு - மலை. இமாசல ராசன் - மலையரசன்.

116. பாசிழையார் - தலைவியினது. வாசியை - குதிரையை.

117. மத்தம் - ஊமத்தை. நத்து அஞ்சு கந்தரத்தாள் - சங்கு அஞ்சும் கழுத்தை உடையாள். நறை - நறுமணத்தை. பதிந்த - பதிந்தாலொத்த. இச் சித்து அம்பரம்போன்ற நடுவை; அம்பரம் - ஆகாயம்; நடு - இடை.

தலைமகன் தன்னைத்தானே புகழ்தல்.

118. நெறித்தமெல் லோதிநல் லீரென்றன் வல்லவ நீர்மைசற்றும்
குறித்தறி யீர்திருத் தொட்டிக் கலையிற் குளிர்ந்தநிலா
எறித்தமின் வேணிச் சிதம்பர வீசர்தம் மின்னருளால்
பொறித்தபொற் பாவையு ளாவியுங் கூடப் புகுவிப்பனே. (௨௫)

அலர்முலைப் பாங்கி அருளியல் கிளத்தல்.

119. அன்றிலம் பிள்ளையுந் தூக்கணம் புள்ளினத் தஞ்சினையும்
ஒன்றிய வெண்குரு கின்முட்டை கூட்டொடு மோங்கும்வெற்பா
மன்றினின் றாடுங் கலைசைத் தியாகரை வாழ்த்தலர்போற்
கொன்றிப் பனைமடல் கொள்ளார் குணப்பெருங் குன்றத்தரே.

பாங்கி கொண்டுநிலை கூறல்.

120. எல்லாந் தெரிக்குமென் சொல்லா வினியந்த விந்திரையின்
நல்லார்புல்லாரெனினாண்பெண்ணதாய்மண்ணினண்ணிநிற்கும்
புல்லார்நல் லாரெனக் கொண்டுன் குறைமுடி பூங்கலைசை
அல்லார் மிடற்றர் சிதம்பர வீசர்வெற் பாதிபனே. (௨௭)

---

118. நெறித்த - நெளித்த. வல்லவநீர்மை - ஆற்றலின் இயல்பு. பொறித்த - எழுதிய.

119. தூக்கணம்புள் - தூக்கணங்குருவி. சினை - முட்டை. வெண்குருகு - நாரை. கூட்டொடும் கொன்று.

120. இந்திரையின் - திருமகளைப்போன்ற. நல்லாரென்றது தலைவியை. புல்லாரெனின் - கூடாராயின். ஆண்பெண்ணதாய் - ஆண்வடிவம் பெண்வடிவமாகி; திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரால் ஆண்பனை பெண்பனையானதை உட்கொண்டுகூறியது இது. புல்லாரென்றது பனைமரத்தை; "புறக்காழனவே புல்லென மொழிப" (தொல்.) நல்லார் - நல்வர். நல்லார் புல்லாரானால் புல்லாரை நல்லாராகக்கொள்க என்றது ஒருநயம்.

தலைவிஇளமைத்தன்மை பாங்கி தலைவற்குணர்த்தல்.

121. கற்றில கண்கள் களவுகண் மென்முலை காண்பதற்குச்
சற்றில வாம்பலி னாம்பற் பிறந்தில தண்கலைசை
நற்றியா கேசர்நன் னாடு குறுமுளை நாட்டுகொம்பர்
பற்றிடு மோவென்கொல் பேதைக் கிரந்து பகர்கின்றதே. (௨௮)

தலைவன் தலைவி வருத்தியவண்ண முரைத்தல்.

122. களியானைத் தோலர் கலசத் தியாகர் கழலிறைஞ்சும்
அளியார்க் களிக்குங் கலைசையன் னாய்சிறி யானொருசிற்
றுளியாற் சிலையின் வலிகுறைத் தாங்கன் றனதுயிராம்
கிளியார் மொழிவிழி வேலாலென் னுள்ளங் கிழித்தனளே. ()

பாங்கி செவ்வியருமை செப்பல்

123. வாரா ளொருவினை யாட்டினுக் கெங்கும் வளர்த்தகிள்ளை
பாராள் கலைசைத் தியாகர்வெற் பாமதன் பார்த்துருகும்
ஏராள்பொன் னூசலி லேறுளென் னேநினைந் தெங்களையும்
சேரா ளவளுக் கடியேனெவ் வாறு தெரிவிப்பதே. (௩௦)

தலைவன் செவ்வியெளிமை செப்பல்.

124. கொப்பிடு மஞ்செவிப் பஞ்சடி யாயருள் கூர்ந்தெனையும்
கைப்பிடித் தாளுங் கலைசைத் தியாகர் கயிலைவெற்பில்
மைப்பிடி போனடை மானுக்கு நான்வந்த வாறுசற்றே
செப்பிடிற் சேர்த்துத்தன் செப்பிடு சாந்தமுன் செப்பிடுமே. ()

---

121. கண்கள் களவுகளைக் கற்றில. முலை இல. ஆம்பலின் ஆம் பல் பிறந்தில - ஆம்பலைப்போன்ற செவ்வாயில் ஆகும் பற்கள் முளைக்கவில்லை. குறுமுளை - கொடியின் குறிய முளையானது. கொம்பர் - கொள்கொம்பை.

122. அளியார்க்கு - அன்பை உடையவர்கட்கு. சிலை - கல்.

123. ஏர் - அழகு.

124. கொப்பு - காதிலிடும் ஒருவகை அணி. பஞ்சு - செம்பஞ்சுக்குழம்பு. செப்பிடின் - சொன்னால். தன்செப்பென்றது தலைவியின் நகில்களை. தன் நகில்களிலுள்ள சந்தனம் உன் நகில்களில் படும்படி தழுவிக்கொள்வாளென்பது கருத்து.

பாங்கி என்னை மறைத்தபின் எளிதென நகுதல்.

125. நன்னறும் போது நெடுநாரு மோர்வயி னண்ணிடினும்
இன்னணி கூரப் பிணைப்பாரில் லாம லிணைந்தொன் றுமோ
பின்னக மோலிக் கலைசைத் தியாகர் பெரியவெற்பா
நின்னகத் தெண்ணமற் றென்னையல் லாம னிறைவுறுமே. ()

அந்நகை பொறாது அவன் புலம்பல்.

126. நிழலார் மழுவர் கலைசைத் தியாகர் நெடுங்கிரிமேல்
குழலார் மொழிமட வாடந்த காமக் கொடுங்கனல்கூர்ந்
தழலாயுள் வேசறும் வேலையி னீயெனை யாற்றலின்றித்
தழலா வியநகை நெய்தனைப் பெய்தனை தாழ்குழலே. (கூரு)

பாங்கி தலைவனைத் தேற்றல்.

127. பன்னூறங் கையகத் தெய்தினும் வாய்மைப் பயன்றருமோர்
நன்னூல் வழிச்செல்வர் போற்பலர் பாங்கியர் ஞாங்கருற்றும்
என்னா தியச்சொல் வழியெம் பிராட்டி யிசைந்து றுமால்
பொன்னூர் கலைசைத் தியாகர்வெற் பாவுறல் புன்கணையே. (கூச)

பாங்கி கையுறை யேற்றல்.

128. அக்கணப் பன்னெம் மரபோ ரொருவன்முன் னுதரித்த
தெக்கண மாகயி லாயத்திற் றோன்றுஞ் சிறப்பதனால்
முக்கண ரெங்கள் கலைசைத் தியாகரை மோகிப்பர்போல்
இக்கண மேற்பன்மன் னுநின்கை மாந்தழை யேந்திழைக்கே. ()

---

125. பிணைப்பார் - தொடுப்பார். ஒன்றுமோ; ஓ : எதிர்மறை. பின்னகம் - சடை. மோலி - கிரீடம். நிறைவுறுமே: ஏ, எதிர்மறைப்பொருளிலும் வினாப்பொருளிலும் வந்தது.

126. நிழல் - ஒளி. வேசறும் வேலையில் - துன்புறும் சமயத்தில். தழல் - வெப்பம். நகை நெய்தன்னை - சிரிப்பாகியநெய்யை.

127. பன்னூல் தம் கையகத்து எய்தினும். செல்வர்போல் - செல்பவரைப்போல். ஞாங்கர் - பக்கத்தில். ஊதியம் - இலாபம். புன்கண்ணை - துன்பத்தை. உறல் - அடையாதே.

128. அக் கண்ணப்பராகிய எம்மரபில் அவதரித்தவர். தெக்கணமாகயிலாயத்தில் - சீகாளத்திமலையில். தழை, காளத்தியில் உண்டான பெருமைபற்றி ஏற்றுக்கொள்ளுவேன்.

600 005

கிழவோன் ஆற்றல்.

129. மந்திர ரூபர் கலைசைத் தியாகர் வளாருள்போல்
தந்திர மோங்கிய பாங்கிதன் வாண்முகத் தண்மதிபார்த்
திந்திரன் வாழ்வுந் துரும்பாக வெண்ணியின் றென்னிதயம்
சந்திர னைக்கண் டுவந்த சகோராந் தனையொத்ததே. (கூசு)

இறைவன்றனக்குக் குறைநேர்பாங்கி இறைவிக்கு அவன்குறையுணர்த்தல்.

130. கல்லாரக் கண்ணி கலசத் தியாகர் கலைசைவெற்பில்
வல்லா ரொருவர் வருவர்வந் தாலொன்றும் வாய்திறந்து
சொல்லாரென் கண்ணெதிர் நிற்பாரப் பாற்புனச் சூழல்விட்டுச்
செல்லார் தழைகளெல் லாந்தரு வாரென் செயத்தக்கதே. ()

இறைவி அறியாள்போன்று குறியாள் கூறல்.

131. நாகந் திசைகொள் கலைசைத் தியாகரென் னுதர்நந்தி
நாகந் தனின்முனி வோர்வாழ் குகைக்கு நயந்துமத
நாகங்கை யான்மயிற் றோகை யலகிட்டு நன்னுதலாய்
நாகந் தருசெம் மணிவிளக் கேற்றிடு நாடொறுமே. (கூஎ)

---

129. கண்டு உவந்த.

130. கல்லாரம் - கருங்குவளை; கண்ணி : விளி. திருச்சிற்றம்பலக் கோவையார், 82-ஆம் செய்யுளின் பொருளை இப்பாடல் ஒருவாறு ஒத்துள்ளது.

131. நாகம் திசைகொள் - ஆடையாகத்திசையைக்கொண்ட; நாகம் - ஆடை. தியாகர் என்னும் நாதர். நந்திநாகம் - நந்திமலை; நாகம் - மலை. மதநாகம் - யானை; எழுவாய். நாகம் தரு - பாம்புதந்த. "கின்னா முறாலுமணங்குடைச் சாரல், மஞ்ஞையாலு மரம்பயி லிறும்பிற், கலைபாய்ந் துதிர்த்த மலர்வீழ் புறவின், மந்தி சீக்குமாதுஞ்ச முன்றிற், செந்தீப் பேணிய முனிவர் வெண்கோட்டுக், களிறுதரு விறகின் வேட்கும், ஒளிறிலங் கருவிய மலைகிழ வோனே" (பெரும்பாண். 494 - 500) என்ற அரிய பகுதி இங்கே நினைவிற்கு வருகின்றது.

பாங்கி இறையோற்கண்டமை பகர்தல்.

132. மைந்தானை யூரும் கலைசைத் தியாகர் வரையினிற்கூர்
அந்தானை யொண்கண்ணி யுன்மேல் விருப்பின ளுகிமதம்
சிந்தானை யொன்றிங்கு வந்த துண் டோவெனத் தேடியன்று
வந்தானை யின்றுகண் டேன்புனத் தூடென் மறைப்பதுவே. ()

பாங்கியைத் தலைவி மறைத்தல்.

133. மன்றாட வல்ல கலைசைத் தியாகர் வரைமங்கைநீங்
கொன்றாத தொண்டைநன் னாட்டிற் றழைகைக்கொண் டுங்கொ துங்கி
நின்றார் தமைநம் புனத்தய லேகண்டு நீமதித்தல்
நன்றா விருந்த துனக்குமுன் சொற்கு நடுவின்மையே. (சo)

பாங்கி என்னை மறைப்பது என்னெனத்தழால்.

134. அளிக்குங்கண் ணாளர் கலைசைத் தியாகருக் கன்பரைப்போல்
தெளிக்குமென் சொன்னயம் பார்த்துமுன் கண்ணருட் சீதவெள்ளம்
குளிக்குந் தவமுடை யேன்றனக் குண்மைக் குறிப்புணர்த்தா
தொளிக்குங் கருத்தென்னை யென்னுயி ராகிய வொண்ணுதலே.

பாங்கி கையுறை புகழ்தல்.

135. மலையத் தகுவன யாரென்ன கூறினு மாதர்நல்லாய்
மலையத் தகுவன வல்லநம் மன்பர்க்கு வாய்த்தனவ
மலையத்தர் நித்தர் கலைசைத் தியாகர் மகிழ்ந்ததமிழ்
மலையத் தரும்பிட்டுத் தொட்டிந்த வார மருந்தழையே. (சஉ)

---

132. மைந்து ஆனை - வலியையுடைய இடபத்தை. அம் - அழகிய. தானை - ஆயுதம். மதம் சிந்துகின்ற ஆனை.

133. உங்கு ஒதுங்கி. நடுவின்மை - இடையில்லாமை, நடுநிலை இல்லாமை. நடுவின்மை உள்ளதென ஒருசொல் வருவிக்க.

134. தெளிக்கும் - தெளிவுறச்செய்யும்.

135. மலையத்தகுவன - அணிந்துகொள்ளத்தக்கவை. மலையத்தகுவன அல்ல - மாறுபடத்தக்கவை அல்ல. வாய்த்தன. அமலை அத்தர். தமிழ்மலையத்த - தமிழையுடைய பொதியின்மலையின்கண் உள்ளன. ஆரம் மரு தழை - மணம் பொருந்திய சந்தனத்தழை, தொட்டுமலையத்தகுவன.

தோழி கிழவோன் துயர்நிலை கிளத்தல்.

136. நடிக்குந் தயாளர் கலைசைத் தியாகர்பொன் னாகத்தந்தார்
முடிக்குமைம் பாலி யிருற்றிரள் கீண்டு முருகையுரல்
அடிக்குஞ் சரம்பிடிக் கூட்டுதல் பார்த்தன் றசாருயிர்
குடிக்குமஞ் சேயனை யானெனைப் பார்த்துக் குழைந்திடுமே. ()

மறுத்தற் கருமை மாட்டல்.

137. தீயாடு செங்கைத் தலத்தார் கலைசைத் தியாகர்வெற்பர்
ஓயாமற் றந்த தழைக்கோ ளவில்லை யூங்கவர்க்கென்
வாயாரச் சொன்னபொய்க் குந்தொகை யின்றிந்த மட்டுமினிப்
பேயாடல் பார்க்கினும் பாரே னவரிடர் பெண்ணமுதே. (சச)

தலைவன்குறிப்புவேறாக நேறிப்படக்கூறல்.

138. செப்பனை வோர்களுங் காணக் கலைசைத் தியாகவெங்கள்
அப்பனை வேண்டி யருக்கென்பு நீறணிந் தண்ணலவன்
ஒப்பனை வல்லி யுதியன் பகைவந் துதித்திடவே
இப்பனை கொள்ளுங்கொலோவென்னவோபின் னுமெண்ணுவதே.

---

136. பொன்நாகத்து - மேருமலையில். ஐம்பாலி - கூந்தலை உடையாய். இறால் - தேன்அடை. முருகை - தேனை. உரல் அடிக்குஞ்சரம். சேய் அனையான்; சேய் - முருகக்கடவுள். எனைப்பார்த்துக்குழைந்திடுமே : இக் கருத்து, "புணர்துணையோ டாடும் பொறியலவ னோக்கி, இணர்ததை பூங்கான லென்னையு நோக்கி, உணர்வொழியப் போன வொலிதிரைநீர்ச் சேர்ப்பன்" (சிலப். கானல்.) என்னும் செய்யுளின்பொருளைத் தழுவிவந்தது.

137. தொகை இன்று. "நந்தா வொளியர் திருவெங்கை காட்டி னமக் களிப்பச், சந்தா டவியு ளிறைவர்கொய் யாப்பைந் தழையுமில்லை, முந்தா வவர்க் கெதிர் நானுரை யாப்பொய்ம் மொழியுமில்லை, வந்தா லினியெனக் கில்லை பொன் னேயொரு வார்த்தையுமே" (திருவெங்கைக்கோவை, 127) என்னும் செய்யுளைத் தழுவிவந்தது இது.

138. செப்பு அனையோர்களும். அருக்கு - எருக்கம்பூவையும். என்பையும் நீற்றையும். ஒப்பனைவல்லி - அலங்காரத்தையுடைய கொடிபோல்வாய். உதியன் பகை - சோனுடைய விரோதம். இப்பனைகொள்ளுங்கொலோ - இந்தப் பனைமடல்களைக் குதிரையாகக் கொள்வானோ.

தோழி தலைவியை முனிதல்.

139. கைப்பாகும் பேரலர் வாராது காத்துன் கருத்தின்வழி
தப்பாம னிற்பவர்க் கெம்பெரு மாட்டி தயாநிறைத்து
மூப்பாழு நீக்குங் கலைசைத் தியாகரை முன்னலர்போல்
இப்பாவி சொன்னசொற் றீங்கும் பொறுத்தொழி யென்றனையே.

தலைவி பாங்கியை முனிதல்.

140. சுற்றம் பரிசனந் தன்புடை நீதுள வோன்மறையைப்
பெற்றம் பரிகொள் கலைசைத் தியாகர் பிறங்கலன்பர்
அற்றம் பரிவொடு சொற்றாய் சொனதறி யாமையென்றென்
குற்றம் பரிகரி யென்றா யெல்லாமென் குறையென்பதே. (௪௭)

தலைவி கையுறையேற்றல்.

141. ஊரு வாத்தழை கொண்டணி யாவிடி னூடிமடல்
ஊருவர் மன்னர் தழையுடுத் தாலல ரோதியிந்த
ஊருவர்ப் பாமென் கலைசைத் தியாகர்வில் லோதிநல்லாய்
ஊருவர் நீரலர் தீங்கரும் பாங்கை யுறைநமக்கே. (௪௮)

இறைவி கையுறை ஏற்றமை பாங்கி இறைவற் குணர்த்தல்.

142. அலைமேல் வருமங்கை யரன்போ யளித்தலு மங்கைக்கொண்டு
தலைமேற் கொண்டேபின் கலைசைத் தியாகர் தமனியமா
மலைமேற்செங் கோடலுங் கொண்டலுங் கண்டென வண்டழையை
முலைமே லணைத்துக்கொண் டாடிய மோக மொழிவரிதே. (௪௯)

---

139. கைப்பு ஆகும் பேர் அலர் - வெறுப்பு உண்டாதற்குக் காரணமான பெரிய பழிமொழி.

140. சுற்றம் - உறவினர். பரிசனம் - ஏவல் செய்வோர். துளவோனைப் பெற்றமாகவும் மறையைப் பரியாகவும் கொண்ட; பெற்றம் - இடபம். அற்றம் - சோர்வு.

141. ஊரு வா - தொடையில் பொருந்தும்படி. தழை - தழையாலாகிய உடையை. மடல் - பனைமடல்மாவை. ஊர் உவர்ப்பு ஆம் - ஊராருடைய வெறுப்பு உண்டாகும். வில் ஓதி - வில்லாகிய மேருமலை. அலர் ஊர் உவர் நீர் - பழிமொழி பரக்கின்ற உவர்ப்பு நீராகும். கையுறை நமக்குக் கரும்பாம். கையுறையைக் கொள்வேனென்பது கருத்து.

142. செங் கோடல் - செங் காந்தள்; இது கைக்கு உவமை. மேகம் தழைக்கு உவமை.

பாங்கி தலைமகற்குக் குறியிடங் கூறல்.

143. கருப்பாலை யார்க்குங் கலைசைத் தியாகர் கயிலைவெற்பா
திருப்பாற் கடலிடை மால்கண் வளருஞ் சிறப்பதுபோல்
உருப்பாய் பளிக்கறை மேனீலக் கற்சுனை யொன்றுளதால்
விருப்பார யாங்கள் பகல்விளை யாடும் வியலிடமே. (௫௦)

பாங்கி குறியிடத்திறைவியைக்கொண்டு சேறல்.

144. காவியப் பாக்கொள் கலைசைத் தியாகர் கனகமன்றுள்
ஓவியப் பாவையொப் பாய்சுனை மூழ்கி யுழைகிடந்த
ஆவியப் பானல்கொய் தம்மார் தளிர்பறித் தங்கனமோர்
மாவியப் பார்தரு செம்மலை நோக்குவம் வாவிரைந்தே. (௫௧)

பாங்கி தலைவியைக்குறியிடத்துய்த்து நீங்கல்.

145. திகிரிநின் றோட்குடைந் தேயுகு முத்தமுன் சீறடிக்கே
திகிரியம் பாறை யுறுத்துமிங் கேநிற்க சென்றுமுன்னான்
திகிரியந் தேரல்கு லாய்தென் கலைசைத் தியாகர்நந்தித்
திகிரியஞ் சாரல் வழிசீத் தொதுக்கித் திரும்புவனே. (௫௨)

இறைவி இறையோனிடத் தேதிர்ப்படுதல்.

146. நந்தாத செல்வக் கலைசைத் தியாகரை நாடிமுன்னான்
சிந்தா குலமறப் பூசித்த புண்ணியந் தேம்பொழில்வாய்க்
கந்தாவ தின்றி வறியேன் றவித்திடு காலத்தென்வாய்
ஐந்தாலுங் கொள்ளவொர் தெள்ளமிர் தப்பிழம் பாய்நின்றதே.)

---

143. வியல் இடம்- பரந்த இடம்.

144. காவியப்பா - காவியங்களிலுள்ள செய்யுட்களை. உழை - பக்கத்தில். ஆவி - குளம். பானல் - நீலோற்பலம். செம்மலை - சிவந்தமலை, தலைவனை,

145. திகிரி - மூங்கில். திகிரியம் பாறை - வட்டமாகியபாறை. திகிரி அம் தேர்; திகிரி - உருளை. நந்தித்திகிரி - நந்திமலை. வழி சீத்து - வழியைத் தூர்த்து.

146. கந்தாவதின்றி - பற்றுக்கோடில்லாமல். வாய் ஐந்து - பொறிகள் ஐந்து; "பொறிவாயி லைந்து", "கண்டுகேட்டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும், ஒண்டொடி கண்ணே யுள" (குறள்.) புண்ணியம் அமிர்தப்பிழம்பாய் நின்றது.

புணர்ச்சியின் மகிழ்தல்.

147. மாலா தரிக்குங் கலைசைத் தியாகர் வரத்தின்வரும்
பாலா றுடனொரு தேனுறு வந்தொன்று பட்டிடினும்
வேலா வலயத்தின் மேலாம் விருப்புடை யேற்களித்த
ஆலால மன்னகண் ணளிதழ்த் தேனையொப் பாவதின்றே. (௫௪)

புகழ்தல்.

148. தண்டக நாடர் கலைசைத் தியாகர் சராசனமாக்
கொண்டபொன் மேருவிற் றாரகை சூழ்ந்தெனக் கூர்ந்திலகும்
வண்டா ளத்தொடை சேர்முலை யீருங்கள் வாயினிலசொற்
கண்டதன் பின்னல்ல லோகண்டு நாளுங் கரைகின்றதே. (௫௫)

தலைமகன் தலைமகளை ஆயத்துவிடுத்தல்.

149. அரணங்கள் சூழ்தென் கலைசைத் தியாகர்தம் மன்பருக்கே
சரணபத் மங்களைத் தந்தாளு மீசர் தடங்கிரிமேல்
பிரணவ மந்திரங் கட்குமுன் னுநிற்கும் பேறதுபோல்
திரணவ ரத்னமன் னுபுன தாயஞ் சிவணுகவே. (௫௬)

பாங்கி தலைவியைச்சார்ந்து கையுறைகாட்டல்.

150. தோகாயுன் மூரற்கு நேரற்ற வாரந் துடைத்தகற்றிப்
பாகாயசொல்லினின்மெய்க்குமங்கைக்குவெம்பார்வைக்குநேர்
ஆகாவ சோகரிந் தம்புய நீலங்கொய் தியான்கொணர்ந்தேன்
நீகாண் கலைசைத் தியாகேசர் நீண்முது குன்றினின்றே (௫௭)

---

147. மால் ஆதரிக்கும் - திருமால் அன்பு செய்யும். வேலாவலயத்தின் - கடலைக்காட்டிலும். அளித்த தேனை.

148. தண்டகநாடு என்பது தொண்டை நாட்டின் பெயர்களில் ஒன்று. சராசனம் - வில். கண்டு - கற்கண்டு. கரைகின்றதென்பதற்கு வருந்துகின்றதென்பது குறிப்புப்பொருள்.

149. பிரணவம்: எழுவாய். திரள் நவரத்னம். ஆயம் - மகளிர்கூட்டம். சிவணுக - பொருந்துவாயாக.

150. ஆரம் - முத்துக்களை. "வழிசித்தொதுக்கித் திரும்புவனே" (145) என்று முன்னர்க்கூறியதற்கேற்ப, "ஆரந்துடைத்தகற்றி" என்றான். மெய்க்கு நேராகா அசோகை அரிந்தும் அம் கைக்கு நேராகா அம்புயத்தையும் பார்வைக்கு நேராகா நீலத்தையும் கொய்தும் கொணர்ந்தேன் என நிரனிறையாகக்கொள்க.

பாங்கி தலைவியைப் பாங்கிற் கூட்டல்.

151. பாலாம் பகத்தர் கலைசைத் தியாகர் பனிவரைமேல்
பாலார் மொழிபல் பரிமளப் போது பறித்துனதைம்
பாலாரச் சூட்டுபு சித்திரித் தேனினிப் பண்புடனிப்
பாலாசி னீங்கிச்செல் வாம்நம தாயம் பயிலிடமே. (௫௮)

பாங்கி தலைவியை நீங்கித் தலைவற்கு ஓம்படைசாற்றல்.

152. இத்திரு வின்பொருட் டேதே யுழைத்தன னெங்கள்வெற்பா
அத்திறன் யாவு மறிவா யுபகரித் தாருயிர்க்கு
மத்திநின் றேற்றுங் கலைசைத் தியாகர் மகிழுமருட்
சத்தியைப் போனடு நின்றளித் தேனையுந் தாங்குகவே. (௫௯)

பாங்கி தலைமகனை உலகியன் மேம்பட விருந்து விலக்கல்.

153. வள்ளித்தண் கந்த மதுவும் வலைப்பட்ட மான்றசையும்
தெள்ளித் திரட்டிய செந்தினை மாவையுந் தித்திக்கநீர்
அள்ளிப் புசித்தெம் பழங்குடிற் றங்கி யணைந்தவிராத்
தள்ளிப்பின் யேகுங் கலைசைத் தியாகர் தனிநகர்க்கே. (௬௦)

விருந்திறை விரும்பல்

154. நனைப்போ தணியு நறுங்குழ லீர்தம்மை நாடிநெஞ்சில்
நினைப்போர்க் கருளுங் கலைசைத் தியாகர் நெடுங்கிரிமேல்
தினைப்போ னகமு மறியூ னுணவுந் தெரிந்தளித்தால்
வினைப்போக மன்றந்த மெய்ப்போக மாகும் விருந்தினர்க்கே. ()

---

151. பால அம்பகத்தர் - நெற்றிக்கண்ணை உடையவர். பாலார்மொழி - பாலைப்போன்ற சொற்களையுடையாய். உனது ஐம்பால் ஆர. சித்திரித்தேன் - அலங்கரித்தேன். இப்பால் ஆசின் நீங்கி - இவ்விடத்தை விரைவில் விட்டுநீங்கி.

152. உழைத்தனன் - வருந்தி முயன்றேன். மத்தி - நடு. ஏற்றும் - முத்தியின்பத்தைப்பெறுவிக்கும்; "முத்தியென் னப்படு மங்கையைச் சேர முயல்பவரும், சத்தியென்னப்படு மீச னருளன்றிச் சார்தலுண்டோ, சுத்திபெற் றோர்தொழும் சொன்னத் தியாகர் துறைசைவெற்பிற், சித்திர தீபத் துயிர்ப்பாங்கி யாற்சுகஞ் சேருதுமே" (திருவாவடுதுறைக் கோவை, 80.) என்ற செய்யுளிலும் பாங்கிக்கு அருட் சத்தியை உவமை கூறியிருக்கின்றனர்.

153. வள்ளித்தண் கந்தம் - வள்ளிக்கிழங்கு.

154. நனைப்போது - தேனையுடைய மலர்; மொட்டுறு மலருமாம். தினைப் போனகம் - தினையாற் செய்த உணவு. மெய்ப்போகம் - முத்தியின்பம்.

கக. பகற்குறி.

கிழவோன்பிரிந்துழிக் கிழத்தி மாலையம்பொழுது கண்டிரங்கல்.

155\. வெள்ளைவண் டேர்செய்க் கலைசைத் தியாகரை மேவலர்போல்
வள்ளையை மோதுங்கண் ணையன்பர் செய்மையர் வாரியிலேழ்
கிள்ளையந் தேரினன் வீழ்ந்தொளித் தான்மதி கேண்டெனக்கே
கொள்ளைவெம் மாலை யெழுப்பவிம் மாலை குறுகியதே. (க)

பாங்கி புலம்பல்.

156\. சடைநெடு மோலிக் கலைசைத் தியாகர் சயிலத்தென்னை
உடையவள் சோரவிம் மாலையம் போதிங் குறவருவித்
திடையற வின்றிர வித்தேர் விரைந்திழுத் தேகுதலால்
கடையி லரிசி வடவையின் வேவக் கடவதுவே. (உ)

தலைவன் நீடத் தலைவி வருந்தல்.

157\. தென்மாலை யுண்ணும் பணியார் கலைசைத் தியாகர்வெற்பில்
பன்மாலை கொண்டுநற் பண்ணையின் னார்வந்தெம் பாலுறுமுன்
என்மாலை வேலொடும் வந்தில ரென்னல மேய்ந்துண்டுநென்
னன்மாலை தேர்க்கொரு காலோ னுடன்சென்ற நல்லவரே. (ஙு)

155\. வண்டு - சங்கு. செய் - வயல். வள்ளை - வள்ளைக்கொடிபோன்ற காது. ஏழ்கிள்ளை - ஏழுகுதிரைகள். மதி - புத்தியை. மாலை எழுப்ப - மயக்கத்தை உண்டாக்க.

156\. என்னை உடையவளென்றது தலைவியை. கடையில் அரிசி - கடையெழுத்து இல்லாத அரிசி; அரி - குதிரை. கடையிலுள்ள அரிசி வடவைக்கனலில் வேவக் கடவதென்று இதில் தோற்றுவது ஒருநயம்.

157\. தென்மாலை - தென்றற்காற்றை. பன்மாலை - பலவரிசை. பண்ணையின்னார் - விளையாட்டு மகளிர். என் - என்ன காரணம். நென்னல் மாலை. தேர்க்கு ஒருகாலோன் - சூரியன்; கால் - சக்கரம். தலைவன் மாலைக்காலத்தில் சூரியன் அஸ்தமிக்கும்போது பிரிந்தானென்பது கருத்து.

16625

தலைவியைப் பாங்கி கழறல்.

158\. திருவாளர் வாழுங் கலைசைத் தியாகர்நற் றேசத்தையை
மருவார் குழலி யிரண்டா முருபின் மதித்திடனீ
அருவான கோவெங்கும் போய்வரு மாறில்லை யம்புவிமேல்
உருவான கோவெங்கும் போய்வரு மாலொவ் வொருதொழிற்கே.

தலைவி முன்னிலைப்புறமொழி மொழிதல்.

159\. பொன்னொன் றிலாத வறியரைப் போலுறும் புன்மையல்லால்
மன்னொன்று மாறு மறக்கிலென் னாமல்ல மார்க்கமதா
முன்னொன்று கூறிக் கலைசைத் தியாகரை முன்னலர்போல்
பின்னொன் றுரைத்திடுந் தன்மையர்க் கேதென்று பேசுவதே. ()

தலைவி பாங்கியோடு புலம்பல்.

160\. தோயும் பொழுது முலைத்தடந் தோய்தலில் லாவிடத்தும்
ஏயும் குளிர்பனி நீருஞ்செந் தீயு மெனச்சுகமும்
காயும் பரிவையும் காட்டுவர் செம்பொற் கனங்குழையாய்
ஆயுங் கலைகொள் கலைசைத் தியாக ரசலத்தரே. (சு)

158\. திருவாளர் - செல்வர். தேசத்து ஐயை; ஐயை - தலைவனை. இரண்டாமுருபு: ஐ. அருவான கோ - அரூபமான ஆகாசம். உருவான கோ வென்றது கண்ணுக்குப்புலப்படும் தலைவனுருவத்தை.

159\. மன் ஒன்றும் ஆறு மறக்கில் என் ஆம் - தலைவன் நம்மைப் பொருந்தும் வழியைமறந்தால் என்ன ஆகுமோ. "அப்பற்ற செய்யிற் பசுங்கூ ழென நெஞ் சயர்வதொன்றே, ஒப்பற்ற மன்ன ரொருவிலென் னுமுயர் வான்றுறைசை, எப்பற்று மற்றவர் காண்மாசி லாமணி யீசர்வெற்பிற், செப்பற்ற முற்றவர் போலுரைப் பாருள்ளந் தேர்கிலமே" (திருவாவடுதுறைக்கோவை, 165) என்னும் செய்யுளிலும் இத்தகைய கருத்தே அமைந்துள்ளது.

160\. சுகத்தையும் பரிவையும்; பரிவு - துன்பம். தோயும்பொழுது பனிநீரெனச் சுகத்தையும், தோய்தலில்லாவிடத்துத் தீயெனப் பரிவையும் காட்டுவரென நிரனிறையாகக் கொள்க.

தலைவியைப் பாங்கி அச்சுறுத்தல்.

161. ஏறும் புகழ்வண் கலைசைத் தியாகர்வெற் பேர்தலின்பால்
ஏறு மனத்தொ டினைதலென் னீபுள் ளினங்களின்வாய்
ஏறுந் தினைக்குரல் கண்டாலிக் காவ லினிப்புதிதாய்
ஏறு நமக்குப் புனங்காவன் மாறுமில் லேறுவமே. (எ)

நீங்கற்கருமை தலைவி நினைந்திரங்கல்.

162. திருமங்கை பாகர் கலைசைத் தியாகர் சிலம்பின்மலர்
ஒருமங்கை கேள்வன் மருமங்கைக் கொண்ட வுபாயமுநூல்
வருமங்கைகொண்கன் செந்நாவுறைவஞ்சமும்வாய்ப்பக்கண்டேன்
கருமங்கை கூடச்சென் றார்கள்ளங் கண்டல்லல் கண்டபின்னே.

தலைவிக்கு அவன்வரல் பாங்கி சாற்றல்.

163. கருநட்ட கண்டர் கலைசைத் தியாகர் கடையுகநாள்
திருநட்ட மாடுபொற் பாதங்கொள் வேதச் சிலம்பொலிபோல்
செருநட்ட வேன்மன்னர் தேர்மணி யோசை செவிப்புலனால்
மருநட்ட பூங்குழல் கேட்டரு ளுன்கண் மழைநிற்கவே. (கூ)

தோழி சிறைப்புறமாகச் செறிப்பறிவுறுத்தல்.

164. ஆண்டகை யாரெங் கலைசைத் தியாக ரருளினல்லாய்
ஈண்டுகை யாற்றழை கொய்யார்கம் மன்ன ரினிக்கலைமான்
மீண்டுகை யாளுந் தினைக்கு நமக்கும் விடைதந்து தீத்
தீண்டுகை யார்பின் கொடிகட்டி வாழ்வரித் தேம்புனத்தே. (க0)

161. தினைக்குரல் - தினைக்கதிரை.

162. மலரொரு மங்கை கேள்வனது மருமம் கைக்கொண்ட உபாயமும், நால்வருமங்கை கொண்கனது நா உறை வஞ்சமுமென உரைக்க. மங்கைபாகரென்பது பிரான்மலையில் எழுந்தருளியுள்ள சிவபெருமான் திருநாமம். "கணவர்ப் பிரிந்தார் தனித்து வருந்தமின்னார், தலைமேற் கொழுந கொழுதுங் காவினைத் தானறிந்தே, கலைமே யவளவன் வாய்த்தால் விடாளெந்தக் காலமுமே" (திருவாவடுதுறைக்கோவை, 168) என்னும் செய்யுளைப் பார்க்க.

163. கருநட்ட கண்டர்: "கருநட்ட கண்டனை" (தே.) உன்கண் மழை நிற்கத் தேர்மணியோசையைக் கேட்டருளென்க.

164. தீத் தீண்டு கையார் - வேங்கைமரம்; "மையார் தடங்கண் மயிலன்னாய் தீத்தீண்டு கையார் பிரிவித்தல் காண்" திணைமாலை நூற்றைம்பது. 5

தோழி முன்னிலைப்புறமொழி மொழிந்து இற்செறிப்புணர்த்தல்.

165. இளங்காளை யூருங் கலைசைத் தியாகர்வெற் பேறுசிகா
வளங்காள் சுகங்காண் மறக்கப் பெறீரெம்மை மன்மதன்கா
களங்காள மைடன்ன சொற்குழ லாளைக் கலந்தவிறல்
விளங்காளி மொய்ம்புடை வேலா னயர்ந்து விடுக்கினுமே. (கக)

பாங்கி தலைமகன் முன்னின்று இற்செறிப்புணர்த்தல்.

166. பனையை யிடங்கொள் கலைசைத் தியாகர் பாமரென்றீ
வினையையெல் லாமரிந் தாங்குகற் போது விளக்கணிகள்
தினையையெல் லாமரிந் தாரெமர் யாங்கள்செவ் வேலண்ணலே
மனையையின் றேகுவம் வண்புனங் காவற் றொழிலொழிந்தே. ()

பாங்கி தலைவன்முன்னின்று இற்செறிப்புணர்த்தி
ஓம்படை சாற்றல்.

167. இரும்புவி போற்றுங் கலசத் தியாக ரொழிற்கலைசைப்
பெரும்புகழ் நாட பசும்பயிர் தானிவள் பேசிடுநான்
விரும்புமோர் வேலி யருண்மாரி யென்று மிகப்பொழியும்
கரும்புய னீயத னுற்பாது காக்குங் கடனுனக்கே. (கங)

தலைமகன் தஞ்சம்பெறாது நெஞ்சொடு கிளத்தல்.

168. தனியா னுகக்குங் கலைசைத் தியாகர் தடத்தினெஞ்சே
தொனியார் சகுந்தங்க ளோட்டிச்செவ் வேனலஞ் சூழல்வைகிக்
கனியா ரிதழ்மதுத் தந்தது காறுங் கலந்திருந்த
இனியார் பிரியி னினியாரைக் காண்பம்வந் திப்புனத்தே. (கச)

165. இளங்காளை என்றார், ஏகாதசருத்திரர்க்கும் ஈசானனுக்கும் வாகனமாயுள்ளவை முதிய காளைகளாதலின்; தக்க. 461, 580, 789—ஆம் தாழிசையுரைகளைப்பார்க்க. சிகாவளம் - மயில். சுகங்காள் - கிளிகளே. மதன்காகளம் - குயில்; அது சொல்லுக்கு உவமை. காளம் மை - கரிய மேகம்; அது குழலுக்கு உவமை; நிரனிறை.

166. பனையை இறைவன் இடமாகக்கொண்டதலங்கள், திருப்பனையூர், திருப்பனங்காடு, திருப்பனந்தாள் முதலியவை. கணிகள் போது விள்ள - வேங்கை மரங்கள் மலர; சோதிடர்கள் காலத்தைச் சொல்லவென்பது மற்றொரு பொருள். ஏகுவம் - அடைவோம்.

168. தடம் - மலை. சகுந்தம் - பறவைகள். இனிமேல் யாரைக்காண்போம்.

௧௨. பகற்குறியிடையீடு.

இறைவனைப் பாங்கி குறிவரல் விலக்கல்.

169. சங்கதிர் வாவிக் கலைசைத் தியாகர் தழற்கண்வந்த
அங்கதிர் காமத்தன் கைவேற்கண் ணுள்கண் ணடிக்கடிகூர்
வெங்கதிர் வேல வருமாயும் வீயும் விழுந்ததினைச்
செங்கதிர் கொள்ளு மெமர்சேர்ந் துழுவர் செழும்புனமே. (௧)

இறைவியைப் பாங்கி குறிவரல்விலக்கல்.

170. செருமா மதக்களி ரூர்க்குங் கலைசைத் தியாகர் வெற்பில்
ஒருமா மடந்தையின் றேதோ வறிகில னெப்பிலன்னை
பொருமா விழிசிவந் துள்ளங் கொதித்துப் புகையுயிர்த்தாள்
மருமா தவிப்பந்த ராடமுன் போலிங்கு வாரற்கவே. (௨)

இறைமகள் ஆடிடம் நோக்கி அழிதல்.

171. எடுத்தசிற் றில்லுங் கலைசைத் தியாக ரிரசதக்குன்
றடுத்தவொண் சாரலு மாணிக்கத் தண்சுனை யும்புனமும்
கொடுத்திடு மானந்தத் தேன்வழி யாறுங் குலாவிபுலாய்
அடுத்துப் பழகிப் பிரிபவர் போலில்லை யன்னியரே. (௩)

பாங்கி ஆடிடம் விடுத்துக்கொண்டு அகறல்.

172. பெண்பா லுகந்த கலைசைத் தியாகர் பிறங்கலுள்ளார்
எண்பால வெம்மைய ராணைகொண் டேகுது மித்தலைசேர்
தண்பா லயில்கொண் டொருவர்வந் தாற்றள ராதவண்ணம்
பண்பாற் பசுங்கிள்ளை காளெங்க ணீர்மை பகர்மின்களே. (௪)

---

169. கதிர்காமத்தன் - கதிர்காமமென்னும் தலத்தையுடைய முருகக் கடவுள். கண்ணுள்கண் ஆயும் அடிக்கடி வரும்; கண் - இடம்; ஆய் - தாய். கதிர்காமத்தன் கைவேற்கண்ணுளென்றது புகழுவமை. வீயும் - பறவைகளும்.

170. மடந்தை: விளி.

171. இரசதக்குன்று - வெள்ளிமலையாகிய கைலை. ஆனந்தத்தைக் கொடுத்திடு தேன் வழி ஆறும்.

172. எம் ஐயர் - தமையன்மார்களுடைய. இ தலைசேர் தண்=இதண் - பரண்.

2004. எலா - தோழிமுன்னிலைச் சொல் (பரிபா. 8, 69).

2008. பொருநாறு - பொருநராற்றுப்படை. கடாம் - மலைபடுகடாம்.

2014. வியம் - ஒற்றைப்பட்ட எண். வெண்டேரியக்கம் - பாலை. தாமரை - மருதம். திரை - நெய்தல்.

2018. ஆலின்கீழ் அறநால்வர்க்குச் சிவபிரானும், அரசின்கீழ்ப் புத்த தேவனும், அசோகின்கீழ் அருகதேவனும், பாஞ்சராத்திரமாக இருளிடைத் திருமாலாலும் விரிந்தபொருள் என்க.

2020. எண்பெருங்குன்றங்களை 183—ம் பாடலிற் காண்க.

2022. உழிதரும் - வழங்கிய.

2023. நாலடிக்கு அரும்பதவுரையிட்டவர் 'மதிவரர்' என்ற பெயரினர் போலும்.

2026. போலாதே - போலுமன்றே? 'பொன்னின் பெயர்படைத்தாற் போலாதே' என்புழிப் போல (274).

2028. குறுமுனிவன் - மேருமந்தரபுராண ஆசிரியரான வாமனமுனிவர்.

2066. தளப்பாடு - தள்ளற்பாடு; ஒதுக்கத்தக்கது. களப்பாளர் - பழைய குடிப்பெயர். கூற்றுவநாயனார், மெய்கண்டார், அரிதாசர் முதலியோர் இக்குடியினரே.

2068. கோ என வருவன முதனான்கும், முறையே, நீர் (கங்கை), திசை, இடபம், உறக்கம் என்பவற்றை உணர்த்தும். கைக்கோவை - கையபிநயமாகிய குறிப்புமொழி.

2073. எழினியவ்வை - எழினியாற் போற்றப்பட்ட ஔவை. எழினி - அதிகமான்.

2078—81. சூடாமணிநிகண்டுக்கு 'நிகண்டுசூளாமணி' என்பது பெயரென்பது 2081—ம் பாட்டாற் புலனும். இந்நிகண்டு, சிலர் கருத்தின்படி, பத்தாம்நூற்றாண்டில் இயற்றப்பட்டதன்று என்பதும், இதனாசிரியர் விஜயநகர வேந்தரான கிருஷ்ணதேவராயர் காலத்தவர் என்பதும் 'மண்டலபுருடர்' என்ற தலைப்பின்கீழ் யான் எழுதிய கட்டுரையான் உணர்க. (Mythic Society Journal)

2082—8. சகனு 1516(—கி. பி. 1594)ல் அகராதிநிகண்டு இயற்றப்பட்டதாம். இதனாசிரியர், பட்டீச்சுரம், வலஞ்சுழி, திருமேற்றளி என்ற தலங்கட்குப் புராணம் பாடியவர் என்பது இப்பாடல்களினின்று தெரியவருகின்றது.

2093. கோட்டைக்கரை, குழித்தலைப் பக்கத்ததாதல்வேண்டும் என்பர் (G. Tp. D. p. 28.)

2094. நாவல் - போர்க்கழைத்தலொலி, நெற்போரிடுவோர் மகிழ்ச்சி யொலிகளின் குறிப்பு. (ஏரெழுபது, 50).

2096. ஒத்தமுயற்சி - ஒருபடித்தான எழுத்துமுயற்சி. ஒத்து - ஸ்வரங் கள் ஒத்து.

2097. ஏரோர் களவழி - போர்க்களம்போல ஏர்க்களத்தைப் புகழும் புறத்துறை.

2098. பெருவழி - வடுகப்பெருவழிமேற்கு என்று சாஸனங்கூறும்.

2099. சித்தன்வாழ்வு - ஆலங்குடி என்பர் நச்சினார்க்கினியர்; சோணாட்டில் சித்தன்வாழூர் என்ற ஊரொன்றுண்மை இங்கறியத்தத்தக்கது.

2104. 1805-ஆம் பாடற்குறிப்புக் காண்க.

2105. பெரும்பாலைவனம் ஒரூஉ கொங்குநாட்டேக்கு வடபால் உள்ள தென்பது, 'வானவரம்பனன்னாட் டும்பர், வேனி னீடிய வெங்கடறு'' என்ற அகப்பாட்டடிகளால் உணர்க. வலையூர் - திருவாவினன்குடி. 'வையாவி' என்னும் பாடம். காவிரிநாட்டுக் குழித்தண்டலை (=குழித்தலை) என்க (I.M.P.Tp. 101).

2107. வேள் - வேணாடு. பன்றி - பழனிமலைசூழ்ந்த நாடு. புனாடு - சோணாடு.

2111. நரியாகிய பரிக்கு என்க.

2119. கங்காபுரம் ஆளிகை எனவும், கங்காபுர மாளிகை எனவும் பிரித்து அவற்றுக்கு ஏற்பப் பொருள்கொள்க. கங்காபுரம் - கங்கைகொண்ட சோழபுரம். ஆளி-ஆள்பவன். மாளிகை - அரைமனை. சாயல்வளர்த்தல் - நிழலைப்பெருக்கல், காவல்புரிதல்.

2120. திருவில் - கமலாலயம்.

2125. 1131—ம் பாடற் குறிப்புக் காண்க.

2126. 'திருவழுந்தூருவச்சன்' என்ப. ஓது அகத்தார் - ஓதுகின்ற அடியாருள்ளத்தை இருப்பிடமாகக் கொண்டவர்.

2127. சுடர் விளக்கு - கச்சியிற் கோயில்கொண்ட விளக்கொளியெம் பெருமான் என்ப; உமாதேவியுமாம்.

2129. கடிகா பீலியாக என்க. அத்தியூர் - சின்னக்காஞ்சீபுரம்.

2130. கழனி - மருதவைப்பு. கட்டி - வெல்லப்பாகு. 'கச்சியுள்' என்பதனைக் 'கட்டியுள்' என்று திருத்துக. சருக்கரைமாமணி - கற்கண்டு.

2131. கரியசுடர் - திருமால். நிரைவளை - உமாதேவி.

2132. நிலமாமகட்கு முலையும் கலிங்கமும் நிரலே மலையும் பரவையும் என்க. இஃது அடிநிரனிறை. மாரி - மேகம்.

2133. கருமாறிப் பாய்ச்சல் என்பது, காஞ்சீபுரத்துக் காமாட்சி கோயிற் குளத்துள் நாட்டப்பட்ட இரண்டு கழுக்கோல்களின் இடையே உயரமான இடத்தினின்று இலக்குத் தவறாது குதிக்கையாம்; "கருமாறிப்பாய்ந்தாலும் பேற்றுக்குத் தக்கது போராதாய்'' என்ப. (திருவிருத்தம், 21, வ்யாக்).

2134. 'புலக்கோலால்' என்பது பாடம்.

2141. "இது பன்னீரடியாற் பெருவல்லத்தைச் சொன்ன பஃறொடை வெண்பா'' என்பர் யாப்பருங்கல விருத்தியுடையார்.

2142—3. கூவந் தியாகசமுத்திரம் என்பது செங்கற்பட்டு ஜில்லா, பொன்னேரித் தாலூகாவிலுள்ள நரசநாயகபுரம் ஆகிய நரசிங்கபுரத்தின் மறு பெயராகச் சாஸனங்களிற் பயில்வது (I. M. P. Cg. 706-7). 'கூவந்தியாக சமுத்திரமான கொண்டமரசன் சேரி' என்றும் ஓரேட்டுப் பிரதியில் உள்ளது (Descriptive Catalogue of the Tamil Manuscripts, Vol. iii, pp. 1003, 1009).

2142. தாதன் - கம்பர்க்குப் பகைவராயிருந்த வாணியன்தாதன் என்ற புலவன்; 1499, 1521—ம் பாடற்குறிப்புக் காண்க.

2145. அப்பாவி, காற்றேரோன் என்பன, மன்மதனைக் குறிப்பன. தென்னார்க்காடு ஜில்லா கடலூர்த் தாலூகாவில் குடிதாங்கி என்ற ஊரொன்றுண்டு. 1153—4-ம் பாடல்களில் குடிதாங்கி என்ற தலைவர்கள் கூறப்பட்டுள்ளார்.

2146. பொய்கை - வட ஆர்க்காடு ஜில்லா வேலூர்த் தாலூகாவில் உள்ளது.

2149. 'கம்பர்வந்து துதிக்கின்ற நாடு' என்றது, 'கருங்காலிக்கட்டைக்கு' என்று அவர்பாடியதை உட்கொண்டு (1503).

2153. மரகதம் (பச்சைமணி) உமைக்கும், மாணிக்கம் (செம்மணி) சிவபிரானுக்கும் கொள்க. அலைத்தல் - ஒத்தல்.

2154. கண்கொள்ளக்கண்ட கரை - காவிரிக்கரைகட்டவாராத திரிநேத்திரபல்லவனது நெற்றிக்கண்ணை அழித்தமையால் அவன் பணிந்துகட்டிய கரை (கலிங். ஆராய்ச்சி. பக். 9—13.)

2157. ஒங்கல் - உதயகிரி, பொதியமலை. 'இருளகற்றும்' என்றும் பாடம்.

2158. மேலானை, கீழானை இரந்து தமிழ் வேண்டுதி என்றது, பாண்டியனது தமிழ்த்தலைமைபற்றி; கூடற்றமிழால் வேண்டுதி எனினுமாம்.

2159. 'தீந்தாது' என்று திருத்துக. மலையாத தண்டாரான், "ஏனையோரால் அணியப்படாத ஆரத்தைப் பூண்டவன்; என்றது இந்திரனால் தரப்பட்ட ஆரமணிந்தவன் எ-று." (பத்துப்பாட்டு. பக் 433, கீழ்க்குறிப்பு)

2162. அடிதோறும் மூன்றிடத்து மடக்குக்கு மேற்கோள். மூளரி அருகு அடை (அடைந்த) கடைமகளிர் (—கடைசியர்) என்க. வளைவளைய - வளைந்த வளைகளையுடைய. அடை மடை - அடைத்த மடையிலுள்ள. அலைய மலைய - மிக அலையாநிற்க. இளைஇளைஞர் - இளங்குறுமாக்கள். அரியரி - அரியும் அரிக்கட்டு. கிளையுடன் கிளையென்னும் இசைபோற் பாடுகின்ற அளி(-வண்டு). கள் மகிழ் - கள்ளுண் மகிழ்ச்சியால். மருதமரங்கள் உள்ள மருதநிலம். கெழுதகைய மருதம். கெழுதகைமை - விளக்கம் அரியின்மிசை குவளைமலரும் அலரும் என்க.

2164. 'இறவீன்பனை' என்று திருத்துக. இறவு - இருமீன்.

2165. 'இஃது இரண்டொத்து ஓரடியுண்மிக்குச் சீரொத்துவந்தமையால் சுராட்டு' என்பர்.

2168. "இவை நான்கடியாய் அடிதோறும் பொருளற்று அடிமறியாய் வந்தமையால் அடிமறிமண்டல வெளிவிருத்தமாம். (யாப். வி. 68, உரை).

2169. "இவை மூன்றடியான் வந்த மண்டிலவெளிவிருத்தம்". (யாப் வி. 68, உரை.)

2170. ஏந்திசையகவ லோசைக்கு உதாரணம் (யாப். வி. 69, உரை.)

2171. பொழில் தாதும் மதுவும் போதும் புயற்கு மீதேந்தும் என்க.

2172. மூரண்வினைச் சிலேடை. மேவலார் என்பதற்குத்துணைவரைப் பிரிந்தார், துணைவரைப் புணர்ந்தார் என இருவேறு பொருள்கொண்டு, அவ்விருவர்க்கும் ஏற்ப, மாலை - மயக்கம், அந்தி; மதி - கருத்து, திங்கள்; திரிய - வேறுபட, உலாவ; மணம் - வாசம், கூட்டம்; கடிய - அஞ்ச, விளங்க என முறையே ஏற்பக்கொள்க.

2173. 1376—ம் பாடற் குறிப்புக் காண்க.

2175. நீலம் மகிழ்ந்ததற்குப் புன்னை தாதுசிந்தும் என்க.

2177. கொகுடி - முல்லைவகை; 'கொகுடிமுல்லை' என்ப. (தேவா. 265, 1). இது சூளாமணிப் பாட்டு (தூது. 4).

2179. ஓடை நான்கினையும் (பழனத்துக்கு) மரவிசேடமும், (மலைக்கு) மலைவழியும், (யானைக்கு) நெற்றிப்பட்டமும், (புனத்துக்கு) நீரோடையுமாகப் பொருள் கொள்க.

2180. தோடு கொணடு - தொகுதிகொண்டு. குழல்சேர் மலர் என்க. இரண்டாந்தோடு இதழ். தோள் துதைந்த எனவும், தோய்ந்து ஒழி எனவும் பிரித்துப் பொருள்கொள்க.

2182. 67—ம் பாடல்காண்க. 2183. 253—ம் பாடல் காண்க.

2184. நிலவைப் பாலென்று கிள்ளைவாய்மடுத்தலும் துகிலென்று காந்தர் கைநீட்டலும் மயக்கமாகும். திரிபதிசயவணி.

2188. புரைகிளைத்தல் - எங்குந் துருவுதல்; 'இலைப்புரை கிளைத்தல்' எனவும் வழங்குப (சீவக. 1741).

2189—90. வேற்றுப் பொருள்வைப்பணி.

2196. வேதல் முதலியவற்றுக்கு உலகறிகாரணமான நெருப்பு முதலியவற்றைநீக்கி வேறு காரணங் கூறப்படுதலின், அயற்காரணவிபாவனையணி.

2197. பூங்காயாவின் நிறைமலர்ச் சுழல் என்க. சுழல் - சூழல். 'காயாச் சுழல்' எனத் திருத்துக.

2198. பொருட் பின்வருநிலையணி. கார்காலநிலை கூறியவாறு.

2199. ஆநிரையின் ஒழுங்கான மணியோசைபோல, கோடலே (காந்தளே! நீயும்) நிறையைக் கொள்ளாதே. வரையா(—அளவிடற்கரிய) அரையாம் இருள்(—நடுயாமம்) என்க. மாலை மாலை - மயக்கஞ்செய்யும் மாலை. விரையா இரையா - கடுகி இரைந்து. மேகம் எழும் என்க. ஏகம் உரையா - நிச்சயச்சொல் சொல்லாத. உரையார் - புகழுடையார். ஒல்லன - பகையாயின.

2201. பச்சைவடம் - மேற்போர்வை (சூடு, 4, 8, 2).

2202. பொரிப்பு - பொரியலுணவு.

2203. நெஞ்சம் மரங்கொல் என்க.

2207. சாபுங்கம் - அம்பினடிப் பாகம். கருணமூலம் - காதடி. கிரி - இமயம்.

2210. மதமான் - களிறு. இவளும் - புரளும். புனலருவிமலை ஆம் - பொதியமலையிடத்துத் தோன்றும்.

2212. குரவு - குரவமலர். மூலதாம் விரவா இரவு ஆம் - தனங்களைக் கூடாத இரவில் தோன்றும். உரவா - வலியோனே! தென்றல் வர, (அஃது) வாவு அரவாம் என்க. வாவுதல் - பாய்தல்.

2213. தென்றல் காமத்தை வளர்த்தலால் அனங்கன் துணையாமென்றும், தான் வந்தவளவிற் கொடிகளைத் தளிர்ப்பித்தலின் தலைமகனும் என்றும் கூறப்பட்டது.

2214. குறைபெய்தல் - கூறுதவற்றையும் பெய்தமைத்தல்.

முற்றும்.

ஸ்ரீ:

பெருந்தொகைச்

செய்யுண்முதற்குறிப்பகராதி.

அ.

அக்கரங்க	426
அகத்தியந்தால்	398
அகலிடமு	228
அங்கங்குலுங்க	321
அங்கண்வா	46
அங்கம்புலி	20
அங்கமிலாத	134
அச்சுதனளிப்	453
அஞ்சாலிமக்	402
அஞ்சின்முடி	159
அட்டதிசை	421
அட்டமியிலோ	84
அடல்வணங்கு	188
அடிக்கண்ணதி	197
அடிசிற்கினி	320
அடிநோக்கி	189
அடியதிரார்	99
அடியார்க்	441
அடுக்கப்படிக்	314
அடுகயலை	273
அடுத்துவருந்	450
அடும்போதுஞ்	378
அடுமதில்பாய	113
அடையுமிரத்	456
அடையெண்பெ	477
அடையென்பார்	260
அண்டகோள	428
அண்ணல்சம்	487
அண்ணலதிகையாற்	256
அண்ணலதிகையரு	259
அணிகிளர்	6
அணிகொண்ட	222
அணிதங்கு	57
அணிநிழ	33
அணியாய	140
அணியிழை	232
அத்தர்தென்	224
அத்திமுத	446
அதிகையர	254
அதிமதர	366
அந்தகனந்த	67
அந்தணர்வேள்	124
அந்தணரவொ	121
அந்தரத்துள்	78
அந்திப்பிறை	401
அப்பருக்கெண்	439
அப்பாகுமர	500
அமயிலேதோய்	363
அம்பதுமத்தார்	380
அம்பிகையரன்	452
அம்பொற்பணை	23
அம்பவள	425
அம்மானதிகை	255
அமரகத்து	147
அமரிக்கையா	299
அய்யநின்சென்	451
அயிற்கதவ	112
அரக்கரைப்	487
அரசர்குல	235
அரசவட	390
அரசியலை	472
அரசொருநட்	90
அரவூர்ம	98
அரனவனிடத்	452
அராப்புனை	255
அரிகுருகு	234
அரிசமய	410
அரிகேசரி	222
அரிசிலிளைத்	21
அரிமலரா	425
அரிமாசுந்த	158
அரியதுகேட்	60
அரியேறுமுன்	49
அருணெறியாற்	55

அருணமாஞ்	514	அன்றயனை	9
அருந்ததி	462	அன்ருழிநின்	391
அருந்தவர்க	56	அன்றுகொனா	150
அருமறைகளொரு	459	அன்றுதொழுத	186
அருமறையின்	454	அன்றுநீசெல்	334
அரும்பவிழ்	122	அன்றையினு	338
அருமணியை	127	அன்னவரை	291
அருமறைமா	254	அன்னஞெகிய	202
அருமொழிதன்	160	அன்னுயறங்	130
அருவாகா	255	அன்னுயிவனெ	234
அரைதருமே	197	அன்னைபோலெவ்	185
அரையது	75	அன்னையுங்கோல்	131
அல்லிமலர்ப்	454	அனந்தனும்	486
அல்லிற்பிரிக்	239	அனலெனகி	90
அலங்கலணி	271	அனவரத	39
அலங்குதார்ச்	132	அனைத்துலகு	110
அலைகடற்	39		
அலைகுளிப்	217	ஆ.	
அலைபுரியும்	466		
அலையான்கவடு	302	ஆஅவிதியோ	276
அலைவளைத்த	280	ஆக்கப்படுக்	65
அவற்பதத்	235	ஆசைப்படுவ	89
அவனிமுழு	275	ஆசையல்குல்	89
அவனேபுல	471	ஆடலமர்ந்த	257
அவிழ்ந்ததுணி	120	ஆடவர்களெவ்	9
அவிழ்ந்தன	512	ஆடுகைழைகிழிக்	507
அழலணங்கு	37	ஆடுகோகுடு	136
அழுக்காறிலா	86	ஆடுங்கடைம	338
அள்ளற்பழ	492	ஆடுந்தனித்	250
அள்ளியிடுவ	440	ஆடுந்தெளி	251
அளவறியானட்	88	ஆடல்புரியு	496
அளவேவடி	26	ஆடும்பொழு	147
அளிகொளுந்	333	ஆடுவதுஞ்செக்	337
அளிமுடியா	122	ஆண்டதனு	454
அற்றதலையி	325	ஆண்டுகலி	459
அற்றன்ருத	77	ஆதரந்தீ	16
அறத்திற்பி	116	ஆதவன்புதல்	346
அறத்துறைபோ	117	ஆதவன்போற்	459
அறந்திகழா	388	ஆதிசான்ற	155
அறநீர்மை	122	ஆதிசெம்பொ	252
அறமுரைத்	333	ஆதிபதியான	296
அறிவாரா	136	ஆதியங்கட	53
அறிவிலிளை	410	ஆதியானற	36
அறைபறையானை	131	ஆதிவருட	314
அன்பட்ட	296	ஆய்மணிப்பைம்	129
அன்பினுடன்	221	ஆய்வார்பதி	446

உ

மதுரைத்தமிழ்ச்சங்கத்து

1934-ம் ஆண்டு ஏப்ரல்மாத வரவு செலவு கணக்கு.

விவரம்	வரவு 1934 ஏப்ரல்			வரவு 1933 ஏப்ரல்	விவரம்	செலவு 1934 ஏப்ரல்			செலவு 1933 ஏப்ரல்
					I General Section :				
I General Section :					(1) சங்கம் மானேஜ்மெண்டாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	121	12	5	
					(2) சங்கக்கலாசாலை உபாத்தியாயர்கட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	127	...	...	
(1) மாதச்சந்தாவகையில் வரவு...	100	...	...		(3) சங்கக்கலாசாலை மாணவர்களுக்குப் போஷணைக்காகச் செல்லாக்கியது. ...	143	9	...	
					(4) Stationery, contingencies வகையிற் செலவு ...	6	14	6	
					(5) பாண்டியன் புத்தகசாலைக்கு வரும் பத்திரிகைக்குச் சந்தா செல்லாக்கியது. ...	6	9	...	
(2) சங்கக்காலியிடத்துக்கு மாத வாடகை வரவு ...	30	...	...		(6) ஆபீஸ் Furniture ரிப்பேர் செய்த வகையிற் செலவு ...	10	7	6	

(5) **Miscellaneous** வரவு ...	...	15	...			
மொத்தம் ரூ ...	10304	11	...	155	9	...

(6) திருவாங்கூர் ஸ்டேட் எவிடெட் பாங்கில் வட்டிக்குக்கொடுக்கப்பட்டு வாயிதாத் முடிவான Fixed deposit தொகையை திரும்ப வாங்கி மதுரை இந்தியன் பாங்கில் Fixed deposit ல் வட்டிக்குக் கொடுத்திருப்பது ...	10000	...	...			
(7) Miscellaneous செலவு ...	3	7	9			
மொத்தம் ரூ ...	11699	...	3	252	11	3

II Editorial Section:

(1) செந்தமிழ்ப் பத்திரிகைக்குச் சந்தா வகையில் வரவு ...	4	...	...			
(2) சங்கப்பதிப்புப் புத்தகங்கள் விற்றவகையில் வரவு ...	45	2	...			
(3) செந்தமிழ்ப் பழையபிரதிகள் விற்றவகையில் வரவு. ...	...	13	...			
மொத்தம் ரூ ...	49	15	...	36	7	...

II Editorial Section:

(1) ஷை ஆபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	35	...	...			
(2) சங்கப்பதிப்புப்புத்தகங்கள் அச்சிடும் சம்பந்தமாக ஸ்டேஷனெரி கண்டின்ஜன்ஸி வகையிற் செலவு. ...	35	2	4			
(3) ஷை சம்பந்தமாக அச்சுக்கூலி பைண்டிங்கூலி வகையிற் செலவு	58	...	...			
(4) தபால், தந்திவகையிற் செலவு. ...	8	...	...			
மொத்தம் ரூ ...	186	2	4	36	...	...

III Press Section:

(1) அச்சுக்கூலிவகையில் வரவு.	52	...	...			
(2) பைண்டிங் கூலிவகையில் வரவு ...	6	...	...			
மொத்தம் ரூ ...	58	...	...	...	...	...

III Press Section:

(1) அச்சாபீஸ் சிப்பந்திகட்குச் சம்பளம் செல்லாக்கியது ...	32	5	4			
(2) ஷை ஆபீஸ் **Stationery contingencies** வகையிற் செலவு.	21	6	6			
மொத்தம் ரூ. ...	53	11	10	...	...	...

ஆக மொத்தம் வரவு ரூ ...	10112	10	0	192	..	..	
மாத ஆரம்பத்திலிருந்த கையிருப்பு ரூ ...	10734	11	9	14071	8	..	*By M. U. C. B. Pass Book Rs. 500- 0- 0 M. R. C. C. Bank Pass Book Rs. 8510-10- 2 Cash on hand Rs. 247-13- 2
ஆகமொத்தம் ரூ ...	21147	5	9	14263	8	..	9258- 7- 4

ஆக மொத்தம் செலவு ரூ ...	11888	14	5	288	11	3
மாத முடிவில் மீதி இருப்பு ரூ ...	* 9258	7	4	13974	12	9
ஆகமொத்தம் ரூ ...	21147	5	9	14263	8	...

குறிப்பு:-மேலேகண்ட விவரப்படி இம்மாதமுடிவில் மீதி இருப்பு ரூ 9258-7-4 தவிர, மதுரை M. R. C. C. Bankல் வட்டிக்காக Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள மூலதனங்கள் (1) ரூ. 25011-5-0; (2) ரூ. 1050-0-0; திருவாங்கூர் ஸ்டேட் லிமிடெட் பாங்கில் வட்டிக்காக Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள மூலதனம் ரூ. 10000; மதுரையிலுள்ள இந்தியன் பாங்கில் வட்டிக்காக Fixed Depositல் வைக்கப்பட்டுள்ள மூலதனங்கள் (1) ரூ. 10000; (2) ரூ. 5000; காரைக்குடி மகா-௱-௱-ஸ்ரீ ள. லெ. சா. ராம. சாராயணன்செட்டியார் அவர்களின் சென்னை அப்போன் கடையில் வட்டிக்குச் சேர்க்கப்பட்டுள்ள மூலதனம் ரூ. 1200; பணம் வசூல் அனுப்புவதற்காக வெளியே அனுப்பியுள்ள உண்டியலின் தொகை ரூ. 1000 ஆகும்.

Audited and found correct,
V. S. RAMASWAMI, AUDITOR, 21—7—'34.

LAKSHMINARAYANAN,
MANAGER, 2—6—'34.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

	சங்கப்பிரசுரம்.	ரூ.	அ.	பை.
1.	ஞானமிர்த மூலமும் உரையும்	1	0	0
2.	சைவமஞ்சரி	1	8	0
3.	யாப்பணியிலக்கணங்கள்	0	10	0
.	வைத்தியசாரசங்கிரகம்	5	0	0
.	பன்னூற்றிரட்டு	3	0	0
6.	மகாபாரதம் அரும்பதவுரையுடன்	4	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய. முதற்பாகம்.	6	0	0
	ஷை இரண்டாம்பாகம்	4	8	0
	ஷை மூன்றாம்பாகம்	5	0	0
0.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய)	1	12	0
	திருவருணைக்கலம்பகம்	0	6	0
	அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ்	0	8	0
	கலைசைச்சிலேடைவெண்பா	0	5	0
	தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி	1	4	0
	திருவாரூர் நான்மணிமாலை	0	4	0
	பன்னூற்றிரட்டு (செலக்ஷன்)	0	4	0
	திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன	0	1	0

செந்தமிழ்ப்பிரசுரம்.

		ரூ.	அ.	பை.
1.	ஐந்திணையைம்பது உரையுடன்	0	3	0
2.	களவழி (5) இனியதுநாற்பது (உரையுடன்)	0	3	0
4.	புலவராற்றுப்படை	0	3	0
6.	நேமிநாதம் (உரையுடன்)	0	12	0
*7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)			
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்)	0	8	0
*9.	அநுமானவிளக்கம்			
10.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
12.*	பன்னிருபாட்டியல்			
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	0	2	0
15.	திருச்செந்திற்கலம்பகம்	0	3	0
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தானதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்	0	4	0
19.	தேவையுலா	0	3	0
20.	நரிவிருத்தம்	0	2	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
22.*	திருக்கலம்பகம் (ஷை)			
24.	குருமொழிவினாவிடை	0	1	0
25.	கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை	0	8	0
28.*	சந்திராலோகம்			
30.	ஞானமிர்தக்கட்டளை	0	3	0
31.	பாண்டியம்	0	4	0

32.	மனீஷாபஞ்சகம்	0	8	
33.	வேளிர்வரலாறு	0	8	
34.	அகப்பொருள்விளக்கம்	1	4	
36.	உவமானசங்கிரகம்	0	1	
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	4		
38.	திருப்புல்லாணிமாலை	0		
39.	பழமொழி மூலமும் பழையஉரையும் (முதல் 100 செய்)	1		
40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ...	0		
41.	பொருட்டொகைநிகண்டு	0		
42.	அகராதிநிகண்டு	0	1	
43.	மேகவிடுதூது	0		
44.	திருக்குற்றாலமாலை	0		
45.	தண்டலையார்சதகம்	0	[illegible]	
46.	இராமோதந்தம்	0	3	
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்)	1	0	
48.	சேதுநாடும் தமிழும்	0	6	
49.	கடைவள்ளலார்காலம்	0	6	
50.	தமிழரும் ஆந்திரரும்	0	4	
51.	மதங்கசூளாமணி	1	0	
52.	கூடற்புராணம்	0	10	
53.	திருவள்ளுவர்	0	6	
	ஷை ஆங்கிலத்தில்	0	6	
54.	அரும்பொருள்விளக்க நிகண்டு* ...	1	4	
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ...	0	12	(
56.	பாப்பாவினம்	0	10	0
57.	மதுரைமும்மணிக்கோவை	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	0	3	0
59.	கடம்பர்கோயில் உலா	0	6	0
60.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	0	6	(

மேலேகண்ட சங்கப்பதிப்பில்லாத புத்தகங்கள் வேண்டுவோர் வே
புத்தகசாலைகளுக்குத் தாங்களே நேரில் எழுதிப் பெற்றுக்கொள்ளவேண்டு

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷ
ங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச் "செந்தமிழ்"ப்பத்திரிகைக்கு வருஷ
சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வரு
சந்தா ரூ 4—8—0. இதுவரை 30 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்
இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பை
செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பை
செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—12—0 வீதமும் வி
பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி
இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அத
மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீ
கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.

(1)	(2)	(1)	(2)